ஒளி : 04 கதிர் : 02 2025 - ஏப்ரல் -ஜூன்

# அவிர் 14

கலை இலக்கிய முத்திங்கள் இதழ்



350/=

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு


முபீதா அமீன்
அக்கரைப்பற்று

# அவரி – 14

ஆற்றல் உள்ள பெண்கள் அமைப்பான SRILANKA PEN CLUB முத்திங்கள் வெளியீடு

ஒளி : 4 | கதிர் : 2 | 2025 – ஏப்ரல் – ஜூன்



## ஆசிரியர் குழு

நிர்வாக ஆசிரியர் : சம்மாந்துறை மஷூறா

இதழாசிரியர் : பாத்திமா ஹகீமா அமீனுதீன் - ஓட்டமாவடி

## செயற்குழு

ஷாமென் நிஸாம்டீன் – கட்டுகஸ்தோட்டை.

வஃபீரா வஃபீ – கொழும்பு

எம்.பி.பர்சானா – நிந்தவூர்

சுஸானா முனாஸ் – மூதூர்

அஸ்மா தீன் – கம்பளை

மஹீஸா பானு - சம்மாந்துறை

மர்ளியா சக்காப் – திருகோணமலை

பாரா தாஹிர் – மாவனெல்ல

மிஸ்ரியா அமீன் - கிண்ணியா

ஜெஸீனா நிஸ்றீன் – சாய்ந்தமருது

லர்பா பதூர்தீன் – கலேவல

நௌஷா ஜமால்தீன் – சம்மாந்துறை

றம்ஸானா ஸமீல் – அக்கரைப்பற்று

பானு ஜிப்ரி – சாய்ந்தமருது


## நிர்வாக அலுவலகம்


மஷூறா மஹால்,
4/C/5/ லேக் வீதி, மருதமுனை.
0765363434 / 0770696559 / 0672261044



ISSN-2961-5194

## தூரநோக்கு

**கலாசாரத்தின் ஊடாக கலை இலக்கியங்களை கட்டி எழுப்புவதும்
ஆற்றல் உள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்**

## நோக்க கூற்று

**முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் களங்கள்
அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்**

## பென்கிளப் கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்.
*Sri Lanka pen club ///*

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா ...
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி ...

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு ...
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம் ...

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை ...
கலாசார மீறல்க ளற்றதோ ருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம் ...

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில் ..
சிதைத்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம் ...

பாடலாக்கம் : சம்மாந்துறை மஷூறா

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 01 | இஸ்லாம் கூறும் உள ஒழுக்கங்கள் | 01 |
| 02 | ஏற்றம் | 04 |
| 03 | மறுமையை நோக்கி | 08 |
| 04 | மனமாற்றம் | 09 |
| 05 | மீண்டெழு பலஸ்தீன் | 12 |
| 06 | அதிக கவலையில் இருந்து மீள்வதெப்படி..? | 13 |
| 07 | வகுப்பறைக்கு வெளியே | 16 |
| 08 | மனித நேயம் | 18 |
| 09 | SLPC யின் ஆளுமை அறிமுகம் அறிவிப்பாளர் ரம்சானா சமீல் | 19 |
| 10 | நடைப் பிணமானேன் | 24 |
| 11 | விழ்வதெல்லாம்...! | 25 |
| 12 | பிர்க்கு | 27 |
| 13 | மொழி பெயர்ப்பு கவிதைகள் | 31 |
| 14 | செயற்கை நுண்ணறிவு: மனிதனின் எதிர்காலத்தை மாற்றும் சக்தி | 35 |
| 15 | கண்கள் திறந்த போது... | 39 |
| 16 | படித்ததில் பிடித்தது | 41 |
| 17 | ஆட்டிசம் | 43 |
| 18 | வாக்கு மீறப்பட்ட கனவு | 45 |

# நிர்வாக ஆசிரியரிடமிருந்து...



அவரி இடையறாது முகிழ்க்கட்டும்! ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான எமது Srilanka Pen Club இன் பெண்களுக்கான ஒரு களமும், தளமுமாக அவரி இருக்கின்றது. அந்த வகையில் நான்காவது வருடத்தின் 2வது இதழில் சந்திப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாண்டில் முற்றிலும் மாறுபட்ட ஒரு ஒன்றுகூடலுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றோம். அதற்கான அத்தனை விடயங்களையும் இப்போதிருந்தே நிர்வாகக் குழு உறுப்பினர்களோடு சேர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன்.

13வது அவரி மர்ஹூமா முப்லிஹா பிர்தௌஸின் முயற்சியில் பல்வேறு ஆக்கங்களை தழுவி வந்திருந்தது. அதனைத் தொடர்ந்த முயற்சியின் விளைவாக அவரி 14 வெளிவருகின்றது. ஒவ்வொரு வெளியீட்டிற்கும் வெவ்வேறு ஆசிரியர்களை நியமித்து அவர்களது ஆற்றலுக்கு களமமைத்துக் கொடுக்கின்றேன்.

இந்த அவரி 14 சஞ்சிகையின் ஆசிரியராகப் பொறுப்பெடுத்திருக்கும் ஓட்டமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பாத்திமா ஹகீமா அமீனுதீன் எமது அமைப்பின் இளம் எழுத்தாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைத் துறையின் இரண்டாம் வருட மாணவியும் கூட. எமது அமைப்பின் தொழில்நுட்ப விடயங்களிலும், நிர்வாக விடயங்களிலும் சுறுசுறுப்போடு செயற்படுபவர். அத்தோடு பல்வேறு இலக்கிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர். அத்தோடு சுயமாக பல்வேறு அமைப்புக்களை நிறுவி அதிலும் தொடர் தொண்டு செய்து வருபவர். ஹகீமாவின் அயராத முயற்சியில் இவ்விதழ் உங்கள் கரங்களில் மலர்ந்திருக்கின்றது. எழுதுங்கள். ஆதரியுங்கள். விமர்சியுங்கள்.

அன்புடன்
இலக்கிய வித்தகர்
சம்மாந்துறை மஷூறா



**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு**

**சிறீலங்காபென்கிளப்பின்காலாண்டுசஞ்சிகையானஅவரி14இன்சஞ்சிகைஆசிரியராகஉங்களைசந்திப்பதில்அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.**

நாடளாவிய ரீதியிலும், சர்வதேசத்திலும் வசிக்கும் பல முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைக் கொண்ட அமைப்பே எமது சிறீ லங்கா பென் கிளப் பெண் எழுத்தாளர்களின் எழுத்தாளுமையை மென்மேலும் வளர வைக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட சஞ்சிகையே அவரி. எமது பென் கிளப் எழுத்துத் துறை மட்டுமன்றி பல அழகியற் கலைகளுக்கும் இடம் கொடுக்கும் ஒரு களமாகவும், பயிற்சிப் பட்டறையாகவும் இருக்கின்றது என்றால் மிகையாகாது.

எமது நிர்வாக ஆசிரியரான சம்மாந்துறை மஷூறா சுஹூறுத்தீன் ஒரு தாய் தன் பிள்ளைகளை எவ்வாறு அறிந்து வைத்திருப்பாரோ அவ்வாறு அமைப்பில் உள்ள அங்கத்தவர்கள் ஒவ்வொருவரினதும் திறமைகளை அறிந்து அதற்கேற்ப அவர்களுக்கான களத்தையும் அமைத்துக் கொடுப்பவர். அந்த வகையில் தான் அவரி 14இனை என்னிடம் ஒப்படைத்திருந்தார். அதற்கான வழிகாட்டல்களையும் தந்திருந்தார். பல தடைகளை கடந்து நான் பொறுப்பெடுத்த அவரி 14இனை மிகச் சிறப்பாக செய்து விட வேண்டுமென்ற நோக்கில் நெடும் நாட்களாக அதற்காக அயராது பாடுபட்டதன் விளைவே உங்கள் கைகளின் தவழும் அவரி 14. இலக்கியங்கள் மூலம் சமூகத்திற்கு பல விடயங்களை கொண்டு சேர்க்க வேண்டும் என்பது எனது அவா. இந்த அவரி சஞ்சிகையானது பல்வேறு விதமான தகவல்களையும் தாங்கியதாக வந்திருக்கின்றது.

ஒரு பெண்ணைப் பொறுத்தவரைக்கும் குடும்பம், கல்வி, சமூகம் என பல்வேறு தனிப்பட்ட பொறுப்புக்கள் இருக்கின்றன. அவள் எல்லா விடயங்களையும் சமநிலையாக பேண வேண்டிய தேவைக்கு உள்ளாக்கப்படுகின்றாள். அந்த வகையில் பென் கிளப்பின் நிர்வாக ஆசிரியர் உட்பட அமைப்பில் இருக்கும் ஒவ்வொருவரும் போற்றப்பட வேண்டியவர்கள். அதே போல் இதற்கு முன் வெளிவந்த 13 சஞ்சிகைகளின் ஆசிரியைகளையும் நான் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றேன். அவ்வகையில் எனக்கு வழிகாட்டிய மதிப்புக்குரிய தலைவி, இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களை அனுப்பி வைத்த சகோதரிகள் என அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்
பாத்திமா ஹகீமா அமீனுதீன்



# இஸ்லாம் கூறும் உள ஒழுக்கங்கள்



ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான் (இஸ்லாஹி)
புல்மோட்டை

இஸ்லாம் மனித சமூகத்திற்கு எண்ணிலடங்கா நேரிய வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அவை ஒவ்வொன்றும் குர்ஆன் சுன்னாவை பின்பற்றியதாகவே காணப்படுகின்றது. மனித சமூகத்தை எவ்வாறெல்லாம் வழிப்படுத்த வேண்டுமோ அவ்வாறெல்லாம் மிகத் தெட்டத் தெளிவாக வழிப்படுத்தியும் வழிகாட்டியும் இருக்கின்றது.

எனவேதான் காலத்திற்கு காலம் மாறாத வகையில் எக்காலத்திற்கும் பொருத்தமான சீரமைப்புக்களாக எமக்கு முன் வாழ்ந்த உத்தமர்களும், நாமும் பின்பற்றி வருகின்ற வழிகாட்டுதல்கள் காணப்படுகின்றன. எனவே

அத்தனை விடயங்களையும் தெளிவுபடுத்துகின்ற இஸ்லாம் மார்க்கமானது மனிதனின் புறத்தூய்மையை எவ்வாறு வலியுறுத்துகின்றதோ அவ்வாறே அகத்தூய்மையையும் சதா வலியுறுத்துகின்றது. மனிதனின் உடல் தூய்மையாக இருப்பது போலவே அவனது உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளம் தூய்மையடைகின்ற போது அவனது செயல்களும் எண்ணங்களும் அழகாக இருக்கும் .அவனது செயல்கள் அனைத்தும் சீரடைகின்ற போது முழு ஆன்மாவும் சீர்பெற்று விடும்.

“إنما الأعمال بالنيات...”

**செயல்கள் அனைத்தும் எண்ணங்களைக் கொண்டே கூலி வழங்கப்படும். (புகாரி, முஸ்லிம்)**

நாம் செய்கின்ற செயல்கள் எதுவாயினும் எம் எண்ணங்களுக்கேற்ப கூலிகள் நிச்சயமாக இறைவனிடத்தில் உண்டு. அவற்றை யாராலும் ஊகிக்கவே முடியாது. ஆகவே இஸ்லாம் எவ்வகையான உள்ள ஒழுக்கங்களை சுட்டிக்காட்டுகின்றது என சற்று அலசலாம்.

✓ **தூய எண்ணம்**

எந்த செயலையும் அல்லாஹ்வுக்காகவும் அவனது கூலியை எதிர்பார்த்துமே செய்ய வேண்டும். பகட்டுக்காகவோ புகழுக்காகவோ அடுத்தவரின் வேண்டுதல்களில் நற்பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது உலகாயுத அற்ப தேவைகளுக்காகவோ செய்யக்கூடாது. அவ்வாறு செய்கின்றபோது இறைவனிடத்தில் அவற்றுக்கான கூலிகள் கிடைக்காது போய்விடும்.

நாம் செய்கின்ற சிறிய நல்ல விடயமாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றிலும் இறைவனின் திருப்தியை நாடியே செய்ய வேண்டும். தீய எண்ணங்கள், பொறாமை ,பொய், பிறர் மனதை புண்படுத்துதல் போன்றன தீய விடயங்களாகவே கருதப்படும் என்பது எம் எல்லோருக்கும் புரிந்து, உணர்ந்த விடயம் தான் அல்லவா!

### √ பொறுமை

வாழ்க்கையில் எத்தனையோ வகையான சூழ்நிலைகளை நாம் எதிர்கொண்டிருப்போம். இன்னும் பலதை எதிர் கொள்ளவும் காத்திருக்கின்றோம். அவை ஒவ்வொன்றிலும் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். இறைவன், எவரின் சக்திக்கு மீறி யாரையும் சோதிப்பதில்லை. எவ்வகையான சோதனைகளாயிருந்தாலும் அவை அனை-த்திலும் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும் .இறைவன், எவரின் சக்திக்கு மீறி யாரையும் சோதிப்பதில்லை. எவ்வகையான சோதனைகளாயிருந்தாலும் அவை அனைத்திலும் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும்.

**'பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான்.' (2: 153)**

பொறுமை என்பது எமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட பெரும் ஆயுதமாகும். அதனை பேண வேண்டிய சந்-தர்ப்பங்களில் தவறாது பேணுவது அவசியம்.

### √ நம்பிக்கை

இறைவனின் நாட்டத்தின் பிரகாரமே அனைத்து விடயங்களும் இப்பிரபஞ்சத்தில் முறையாக நடந்தேறுகின்றன. ஆகவே எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அவனிடம் உதவி தேடுவது அவசியமாகும்.

**'நீங்கள் அல்லாஹ்வை உண்மையாக நம்பினால் அவன் பறவைகளுக்கு உணவளிப்பது போல்**

**உங்களுக்கும் உணவளிப்பான்.' (திர்மிதி)**

அதுபோலவே இறைவனின் கருணை மற்றும் அவனது மன்னிப்பின் மீது நம்பிக்கை வைப்பதும் அவசியமாகும். எந்த ஒரு கஷ்டமான சூழ்நிலையிலும் நம்பிக்கையை ஆங்காங்கே நழுவிச் செல்ல விடாது இழுத்தும் பிடித்-துக் கொள்ள வேண்டும். எதுவாயினும் நம்பிக்கையோடு இறைவனிடம் உதவி தேடும்போது அது ஒருபோதும் கிடைக்காமல் போவதில்லை. எனவே நம்பிக்கைதான் வாழ்க்கை.

### √ தாழ்மை

மற்றவர்கள் மத்தியில் தன்னை உயர்த்திப் பெருமைப்படாமல் அடுத்தவர்களோடு இணைந்து போவதோடு அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல் வேண்டும் .பெருமையையும் அகந்தையையும் தவிர்க்கின்ற போது தானாகவே நற்பண்புகள் ஊற்றெடுக்கின்றன.

**'யார் அல்லாஹ்வுக்காக பணிவாக இருக்கிறாரோ அவரை அல்லாஹ் உயர்த்துவான்.' (முஸ்லிம்)**

### √ நன்றியுணர்வு

முதலில் இறைவனுக்கே நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில் அவன் ஏராளமான அருட்பேறுகளை எமக்க-ளித்து செம்மையாக வாழ்வதற்கு வழிகாட்டி இருக்கின்றான் .அடுத்து, சக மனிதர்களுக்கு அவர்கள் எம-க்கு உதவிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ இருக்கும் அவை ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்து நன்றி உடையவர்களாக திகழ வேண்டும் .பெரிய அளவிலான உதவி சிறிய அளவிலான உதவிகள் என்று இல்லை எதுவாயினும் உதவிகள் தானே அனைத்தும். எனவே எச்சந்தர்ப்பத்திலும் நன்றி உணர்வு உடையவர்களாக நாம் நிலைக்க வேண்டும்.

**நீங்கள் நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு அதிகமாக கொடுப்பேன். (14:7)**

### √ மன அமைதி

இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவனுக்கு அஞ்சி வாழ்வதாகும். இவ்வாறு வாழ்கின்ற வாழ்க் கையானது பெரும் திருப்தியை எமக்குத் தருகின்றது. பாவங்களை விட்டும் விலகி நன்மைகளை செய்வது, நன்மைகளை செய்யுமாறு அடுத்தவருக்கு ஏவுதல் இவ்வாறான விடயங்களில் அதிகமதிகம் மன அமைதிகள் காணப்படுகின்றன.

**'உங்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் பயப்படுபவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியமானவர்.' (49:13)**

√ **பிறருக்கு உதவுதல்**

தன்னுடைய தேவைகளை பிற்படுத்தி பிறரின் தேவைகளை முற்படுத்துகின்ற போது இறைவனின் அன்பானது இன்னும் அதிகமாகவே கிடைக்கின்றது. மற்றவர்களின் கஷ்டங்களை பகிர்ந்து கொள்வது மட்டும் உதவியல்ல மாறாக அவர்களின் கஷ்டங்களைப் புரிந்து நடந்து கொள்வதும் பெரும் உதவி தான்.

**'தங்களுக்கு தேவை இருந்த போதும் தங்களை விட பிறருக்கே முன்னுரிமை கொடுப்பார்கள்.' (59:9)**

அன்பானவர்களே !

இன்னும் எத்தனையோ உள ஒழுக்கங்கள் அடுக்கிக் கொண்டே போகலாம். மேலே கூறப்பட்ட அனைத்து உள ஒழுக்கங்களும் எம் வாழ்வில் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களாகும். அதற்காக ஏனைய உள ஒழுக்கங்களை கடைபிடிக்கக் கூடாது என்பதல்ல. அவற்றோடு சேர்த்து இவற்றையும் தான். இஸ்லாம் கூறும் உள ஒழுக்கங்களை முறையாக கடைபிடிப்பதன் மூலம் ஈருலகிலும் வெற்றி பெறலாம்.




- ☑ உணவின் எச்சங்களையும், உடல் நச்சுகளையும் வெளியேற்றி, செரிமானத்தை மேம்படுத்தும்.
- ☑ வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கும்; கொழுப்பை கரைக்கும்.
- ☑ உடலின் அமில - கார சமநிலையை (பி.எச்) பராமரிக்க உதவும்.
- ☑ நீர்ச்சத்தை தக்கவைப்பதால் சரும செல்களை பாதுகாக்கும்.
- ☑ எலுமிச்சை சாறு கலந்து பருகுவது நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்தும்.



# ஏற்றம்



ஜனூன் கதீஜா அன்சார், திருகோணமலை.

"Eroupe Furniture & Interior Construction" என்ற பெயர்ப் பலகை மின்னொளியில் அழகாக ஜொலித்துக் கொண்டிருந்தது. வீதியால் வரு வோர் போவோர்களையெல்லாம் ஒரு கணம் திரும்பிப் பார்க்கச் செய்தது. அந்த அளவிற்கு காண் போரைக் கவர்ந்திழுக்கும் வகையில் அப் பெயர்ப் பலகை வடிவமைக்கப்பட்டிருந்தது.

நுழைவாயிலை அலங்கரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான் ரமீஸ். பலூன் கட்டப்பட்ட ரிப்பன் கதவின் இரு நிலைகளிலும் பொருத்தப்பட்டு அழகிய மலர்க் கொத்தும் சொருகப்பட்டிருந்தது. அவனுக்கு கையுதவியாக ரமீஸின் தாய் பர்வின் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தாள்.

"மகன்...எத்தனை மணிக்கு வருவாங்க..." "ஜும்ஆ முடிஞ்ச கையோட வருவாங்க உம்மா..., பள்ளிக்கு நேரமாகுது நான் போய் தொழுதிட்டு வாரன்... மிச்ச வேலைகளை நீங்க செய்ங்க உம்மா" என்றவாறு பள்ளியை நோக்கி நடந்தான் ரமீஸ்.

மகன் போகும் திசையையே வைத்த கண் வாங் காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் பர்வீன். "ம்ஹ் ....பாவம் மகன் தட்டத்தனிய... நேரத்துக்கு சோறு தண்ணியுமில்லாம எல்லா வேலைகளையும் தலைக்கு மேல போட்டுக்கிட்டு அவதிப்படுறான் கையுதவிக் கென்று யார்...இருக்கா" மனம் வேதனையால் வெதும்பி கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. வடிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்தவாறு "யா..... அல்லாஹ் ஏன்ட புள்ளட கஸ்டமெல்லாத்தயும் போக்கிடு. அவன்ட தொழில்ல நீ தான் பரக்கத்தத் தரணும்" என்று அவள் மனம் பிரார்த்தித்தவாறு மிகுதி வேலைகளை முடிப்பதில் மும்முரமானாள்.

"தொழுது முடிய நேராக இங்க தான் வருவாங்க.... ரிங்ஸ் சோட்டீஸ் எல்லாத்தையும் தட்டுக்களில் போட்டு வச்சிட்டா வேல முடிஞ்சிடும்" என்று தனக்குள்ளேயே எண்ணியவாறே ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தாள். பக்கத்தில் இருந்த பலா மரத்திற்க்கு கீழ் இருப்பதற்கு கதிரைகளையும் நேர்த்தியாக அடுக்கி வைத்திருந்-தாள்.

"உம்மா...உம்மா... எல்லாம் சரிதானே....மா" மக னின் குரல் கேட்டதும் "ஆ....சரி மகன்...." என்றவாறு மகனை நோக்கி ஓடினாள்.

பள்ளி மௌலவி, கிராம சேவையாளர், அயல-வர்கள், உறவுக்காரர்கள், ரமீஸின் நண்பர்களில் சிலர் என வேலைத்தளத்தின் வாயிலில் குழுமி நின்றனர். மௌலவி யின் பிரார்த்தனையை தொடர்ந்து கடையின் திறப்பு விழா வைபவம். அதனை கடை என்று சொல்வதை விட தளபாடத் தயாரிப்புக்கான வேலைத்தளமும் அதனோடு இணைந்த வகையில் விற்பனை கூடமும் சேர்த்தே அதனை அமைத்திருந்-தான் ரமீஸ்.

"உம்மா....அந்த கத்தரிக்கோல் வச்சிருந்த தட்டை சீக்கிரமா எடுத்திட்டு வாங்க..." என்றதும் தட்டை எடு-த்து வந்து மகனிடம் நீட்டினாள் பர்வீன்.

தாயைப் பார்த்து புன்னகைத்த ரமீஸ், “இப்பிடி வாங்கம்மா...” என தன்னோடு தாயை அணைத்தவனாக “நீ...ங்க தான்ம்மா... இந்த ரிபன வெட்டி இந்த வேலைத் தளத்தை திறந்து வெக்கணும்....” இதனை சற்றும் எதிர்பாராத பர்வீன் “என்ன... மகன் சொல்றீங்க....இத்தன பெரியவங்க இங்க இருக்கும் போது நா... எப்பிடி...” எனத் தயங்கி நின்றாள்.

“உம்மா.... இங்க.. நிற்கிறவங்கள விட நீங்க தான் வயசில பெரியவங்க....., இன்டயிலயிருந்து வேர்க்க் ஷொப்ட. ஓனரே நீங்கதான்மா....” என்றதும் எல்லோரும் மகிழ்ச்சி பொங்க கைகளை தட்ட பர்வீன் ஆனந்த கண்ணீரோடு ரிபனை வெட்டி வேர்க்க ஷொப்பைத் திறந்து வைத்தாள்.

ரமீஸ், தாய் மீது கொண்ட பாசத்தையும், கண்ணியத்தையும், மரியாதையையும் கண்டு அங்கு நின்ற எல்லோரும் வியந்து நின்றனர்.

“இப்படியொரு மகன் கிடைக்க கொடுத்து வெக்கணும்” என ஒவ்வொருவரும் பேசிக் கொண்டார்கள். கடையினுள்ளே ரமீசினால் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு தளபாடங்களும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மிகவும் நேர்த்தியாக அழகாக தயாரிக்கப்பட்டு விலை லேபிள் ஒட்டப்பட்டிருந்தது. அத்தனை பேரினதும் கண்கள் ஆச்சரியத்தால் வியந்து நின்றன.

“மா...ஷால்லா...ஹ் ரமீஸ்ட்ட இப்படியொரு தெறம இருக்கென்டு இத்தன நாளும் தெரியாமப்போச்சே....” என்று பள்ளி மௌலவி புகழ்ந்துரைக்க, கிராம சேவையாளரும் ரமீஸைக் கட்டியணைத்து கை கொடுத்து “congratulation ரமீஸ் நானும் எதிர்பார்க்கல்ல உங்களட்ட இப்படி ஒரு ஆற்றல் இருக்குமென்று நிச்சயமாக நீங்க முன்னுக்கு வருவீங்க ரமீஸ்.... எங்கட பிரதேச அபிவிருத்திக்கும், எங்கட கிராமத்தில உள்ள இளைஞர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பை பெற்று தருவதற்கும் உங்கட இந்த வேர்க் ஷொப் உதவும் அதனால மேல் இடத்துல கதைத்து தேவயான வளங்களை நான் பெற்றுத் தருவேன்” என்று கிராம சேவையாளர் சொன்னதும் மிகுந்த மகிழ்ச்சியோடு அவரின் கைகளைப் பிடித்து ”மிக்க நன்றி சேர்.... அல்ஹம்துலில்லாஹ் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை தான் நான் இத்தனை நாளும் எதிர்பார்த்திருந்தன் சேர்” புன்னகையும் ஆனந்தக் கண்ணீரும் ஒன்று சேர மனதார அவருக்கு நன்றி கூறினான் ரமீஸ்.

“அல்லாஹ்ட நாட்டத்தால ஒருவாறு வேர்க்ஷொப் திறப்பு விழா நல்ல மாதிரி முடிஞ்சிட்டு, ஓடர்ஸும் நெறயவே வந்துட்டு, இன்ஷா.... ல்லாஹ்.. அஸருக்குப் பொறவு வேலய ஆரம்பிக்கணும், என்னோட படிச்ச பாயிஸ் வேலைக்கு வருவான் உம்மா நீங்க ஒன்னுக்குமே யோசிக்காதீ..ங்க.... சரியா...” என்றதும் உச்சி குளிர்ந்து நின்றாள் பர்வின்.

இன்றைய நிகழ்வு ரமீஸின் திறமையை பறைசாற்றுவதாக இருந்ததோடு அவனுக்கு ஒரு அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தது.

இன்றைய நிலையை அடைவதற்கு அவன் பட்ட வேதனைகளும் கஸ்டங்களும் கொஞ்சமல்ல. சுமார் ஆறு வருடங்கள் எடுத்து வந்த முயற்சி இது. ஏழையிடம் ஆற்றல் இருந்தாலும் பணம் என்ற முதல் இல்லை என்றால் அந்த ஆற்றல்கள் கூட அரங்கத்திற்கு ஏறாமல் போய்விடுகின்றதே. சமூகத்தில் ஏழையை நம்பி கைகொடுத்து உதவதற்கு யாரும் முன் வருவதில்லையே இதை அனுபவித்து பாடம் கற்றுக் கொண்டவன் தான் ரமீஸ்.

ரமீஸ் உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் படித்தவன். கொரோனா என்ற அரக்கன் உலகையே ஆட்டிப்படைத்த காலகட்டம் அது. நாடு நகர்களெல்லாம் முடக்கப்பட்டது. பாடசாலைகளும் மாதக்கணக்கில் மூடப்பட்டன. வீட்டில் வறுமை தாண்டவமாடத் தொடங்கியது. அவனது வாப்பாவையும் கொரோனா தொற்றிக் கொண்டது. கண்காணாத இடத்திற்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். சுகாதாரத் துறையினரால் வீட்டிற்கு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. ஒட்டி இருந்த உறவுகள் எல்லாம் ஓட்டம் எடுத்தன. பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு சென்று விட்டார்கள்.

அடர் காட்டில் கண்களை கட்டி விட்டது போல் இருந்தது ரமீஸின் குடும்பத்திற்கு. அவனது தாயும் இரு சகோதரிகளும் வீட்டுக்குள்ளேயே அடைக்கப்பட்டனர்.

சில நாட்களின் பின் வாப்பாவின் மரணச் செய்தி வந்தது. ஆனாலும் யாராலும் வெளியிறங்க முடியவில்லை. மனைவி பிள்ளைகள் இருந்தும் அவரது மையித்து தன்னந்தனியாக அனாதையாக சென்று விட்டது. இந்த கொடுமையை எப்படித் தாங்க முடியும்?. புரண்டு அழும் தாய் சகோதரிகளை எப்படி அவனால் சமாதானப்படுத்த முடியும்? அவனும் சின்னவன் தானே. ஆறுதல் சொல்வதற்கு கூட யாரும் இல்லை. இந்த கொடுமையை இப்போது நினைத்து பார்த்தால் கூட ரமீஸின் உள்ளமும் உடலும் நடுங்கும்.ரமீஸின் உள்ளமும் உடலும் நடுங்கும்.குடும்பத்தைத் தாங்கும் தூணானான் ரமீஸ்.

படிப்பைத் தூக்கி எறிந்தான். இப்போது அவன் தேவை வேலை தான். படிக்கும் காலத்தில் எத்தனை கனவுகள் அவன் உள்ளத்தில். பல்கலைக்கழகம் செல்ல வேண்டும், லெக்ஷரராக வேண்டும், சமூகத்தில் கெத்தா தலை நிமிர்ந்து வாழ வேண்டும். அத்தனை கனவுகளும் நீர்க்குமிழியானது.

கொரோனா நிலைமை சற்று குறைய ஆரம்பித்ததும் வேலை தேட ஆரம்பித்தான். உலகமே முடங்கிக் கிடந்த நிலையில் அவ்வளவு சீக்கிரத்தில் வேலை

கிடைத்து விடுமா என்ன!... அவ்வப்போது ஆங்காங்கே கூலி வேலைக்கு போனான்.

அவனிடத்தில் இயல்பாகவே தொழில்நுட்ப ஆற்றல் இருந்தது. படிக்கும் காலத்தில் புத்தாக்கப் போட்டிகளில் அவனது ஆக்கங்களே பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும். கழிவுப்பொருட்களில் பல்வேறு பொருட்களை செய்வதே அவனது பொழுது போக்காக இருந்தது.

வெயிலிலும் மழையிலும் கூலி செய்து கஸ்டப்படுவதை விட சுயதொழில் ஒன்றை ஆரம்பித்தால் என்ன என்று சிந்திக்கலானான். அவனுக்கு மிகவும் பிடித்தமான தளபாட தயாரிப்புத் தொழிலைச் செய்ய திட்டம் வகுத்தான். எந்த ஒரு பயிற்சியும் அனுபவங்களும் அவனிடத்தில் இருக்கவில்லை. உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் மரவேலை தொழில்நுட்ப பாடத்தை பயின்றிருக்கின்றான். கற்ற கல்வி என்றாவது ஒருநாள் கை கொடுக்குமல்லவா? ஆனாலும் முதல் வேண்டுமே. யார் பணம் தரப் போகின்றார்கள்.

கிடைக்கும் கூலியில் சிறிது சிறிதாக சேமித்த பணத்தில் தேவையான உபகரணங்களை வாங்கி சேகரித்தான். மூலப் பொருட்களை வாங்குவதற்குப் பாரிய முதல் அவனுக்கு தேவைப்பட்டது. வசதியுள்ள உறவினர்களின் படியேறி இறங்கினான். "இங்க பாரு தம்பி.... பெரிய லெவலுக்கு நீ யோசிக்காத. இப்ப சாமான்கள் இருக்கிற விலைக்கும் நாட்டில் இருக்கிற கஸ்டத்திற்கும் யார் இப்ப வீட்டுத் தளபாடங்கள் வாங்க போறாங்க.... சும்மா... கடனப்பட்டுட்டு மேலயும் கஸ்டத்தில விழுந்துறாதே. செய்ற மாதிரி கூலியச் செய்" என்றார்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் படியேறிய இடமெல்லாம் அவன் கீழே தள்ளப்பட்டான்.

"இவன நம்பி லட்சக்கணக்கில எவன் குடுக்கப்போறான். இவனுக்கு பைத்தியம்" என்று ரமீஸின் பெரியப்பா ஏசத் தொடங்கினார். பறக்க எத்தனித்த சந்தர்ப்பங்களிலும் அவனது முயற்சி என்ற சிறகு உடைக்கப்பட்டது. ஆனாலும் ரமீஸ் துவண்டு விடவில்லை.

"உம்மா.....என்னைய நம்பி யாருமே காசுகுடுத்து ஒதவுறாங்கயில்ல... அதனால...நம்ம வீட்டு காணி உறுதிய பேங்ல அடகு வச்சு தாங்க. நான் தொழில் ஆரம்பிக்கிறன் உம்மா" என்று ரமீஸ் பிடிவாதமாய் நின்றபோது பர்வின் அதிர்ந்து போனாள்.

"என்ன மகன் சொல்றீங்க.." நம்மளுக்கு இருக்கிற ஒரே சொத்து இந்த வீடு. ரெண்டு ராத்தாமார் இருக்கிறாங்க. அவங்களுக்கு குடுக்கோணும் அதுவும் வட்டிக்கு" அல்லாஹ்வுக்காக வேணாம் மகன்... கண்ணீர் விட்டு கதறினாள் பர்வீன்.

"அப்போ நீங்களும் என்னைய... நம்பல என்ன? நான் என்ன.....அழிச்சு போட்டிருவனா உம்மா" என ஆத்திரத்துடன் கேட்டான் ரமீஸ்.

"அல்லாஹ்வுக்காக பொறுமையா இருங்க மகன்..., வட்டிக்குள்ள மட்டும் போயிட நெனச்சிறாதீங்க. வட்டி பெரும்பாவம். வட்டி பணத்துல தொழில ஆரம்பிச்சாலும் அதில பரக்கத்து வராது.

அல்லாஹ் நிச்சயமா நமக்கு முகம் காட்டுவான்" என்று பர்வின் ஆறுதல் படுத்தினாள்.

தாய் சொல்வதில் தப்பில்லை என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆனாலும் கடன் கேட்ட இடமெல்லாம் அவன் தன்மானத்தை இழந்து நின்ற வேதனையும், என்னால் முடியும் என்ற வெறித்தனமும் தாயுடன் அப்படி பேச வைத்ததை எண்ணி நொந்து போனான் ரமீஸ்.

"உம்மா...நம்மட....நளீர் ஹாஜியார்...மாமா இருக்காங்களே... அவர் கூட ரமீஸ் தம்பிக்கு

ஒதவி செய்யயில்லையே..., அவரு பள்ளி தலைவரா இருக்காரு... நம்மட குடும்ப நெலமயும் அவருக்கு நல்லா தெரியும்...,அவரு நெனச்சிருந்தா ஒதவிருக்கலாம் தானே உம்மா...? தொழுகிற இடம் மட்டுமா பள்ளி? சமூகத்தில இருக்கிற பிரச்சினைகளை தீர்க்கிற இடமும் தானே உம்மா ? தொழில் செய்ய வசதி இல்லாத தம்பியப் போலவுள்ளவங்களுக்கு ஸகாத் மூலம் சரி ஒதவலாம் தானே உம்மா? என ரமீஸின் சகோதரி லாயிரா அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

"உண்ம தான் மகள், இதப்பத்தி யாரு இப்ப சிந்திக்கிறாங்க... பணம் பணத்தோட தான் சேரும் என்டு சொல்லுவாங்க.... ஏழைகளுக்கு கடன் குடுக்கவும் பயப்படுவாங்க...மகள், நாம அல்லாஹ்ட்ட தான் கையேந்தணும்..... அல்லாஹ் நமக்கு ஒரு விடிவ தராமலா போவான்... நீங்களும் துஆ செய்ங்க... மகள்" என மகளை ஆறுதல்படுத்தினாள் தாய் பர்வின்.

"மகனின் தொழிலுக்கு உதவணும்டா வீட்டில் உள்ள நாமளும் ஏதாவது வருமானம் வாற வழியப் பார்க்கணும் மகள். அதனால கடையப்பம் செய்து பக்கத்து சாப்பாட்டு கடைக்கு குடுக்க கதச்சிட்டு வந்திருக்கன் அவங்களும் காலயிலயும் இரவிலயும் இடியாப்பம் புட்டு அவிச்சிக் கேட்கிறாங்க.

இன்டையிலயிருந்து குடுப்பம் மகள்" என்றவாறு அதற்கான ஆயத்தங்களை செய்யத் தொடங்கினாள் பர்வின்.

ஆமாம் பர்வினின் இந்த முயற்சியினால் வீட்டு செலவை ஓரளவு சமாளிக்க முடிந்தது. ரமீஸ் இரவு பகல் பாராமல் வேலை செய்து கிடைத்த பணத்தை அப்படியே தாயிடம் கொடுத்து வந்தான அதனை சேமித்து சீட்டு பிடித்ததில் கிடைத்த பத்து லட்சம் பணத்தை மகனின் தொழிலுக்கு முதலாக கொடுத்தாள் பர்வீன். அந்தப் பணத்தைக் கொண்டுதான் .

ரமீஸ் இன்று தனது வேலைத் தளத்தை திறந்து வை-த்தான்.

ரமீஸின் தன்னம்பிக்கையும், நேர்மையும், விடாமுய-ற்சியும் அவன் வாழ்க்கையில் ஏற்றத்தைக் கொடு-த்தது. உதவி கேட்டு போனபோது கொடுக்க தயங் கியவர்கள் எல்லாம் இன்று போட்டி போட்டுக் கொண்டு அவனது தொழிலில் முதலீடு செய்ய ஆரம் பித்தனர்.

தன் மகனின் ஏற்றம் கண்டு அல்லாஹ்வுக்கு நன்றி கூறி அகமகிழ்ந்து நின்றாள் தாய் பர்வீன்...!




# பொது அறிவு துணுக்குகள்

01.உலக பரா தடகள கிராண்ட் பிரிக்ஸில் 2025 தங்கப் பதக்கம் வென்ற இலங்கை வீரரின் பெயர் என்ன?
**சமிந்த துலான்**

02.மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் திருநங்கைகள் பங்கேற்க தடை வித்த நாடு எது?
**அமெரிக்கா**

03.உலக தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாடு 2025 எங்கு நடைபெற்றது?
**துபாய் (ஐக்கிய அரபு இராச்சியம்)**

04.பதினாறு (16) வயதிற்குட்பட்டவர்கள் சமூக ஊடகங்களினை பயன்படுத்துவதினை தடை செய்துள்ளது நாடு எது?
**அவுஸ்ரேலியா**

05.இலங்கைத் தேயிலையினை அதிகளவு ஏற்றுமதி செய்யும் முதல் மூன்று நாடுகளும் எவை?
**ஈராக், ரஸ்யா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம்**

06.2030 FIFA உலக காற்பந்து போட்டிகள் எங்கு நடைபெறவுள்ளது?
**ஸ்பெயின், போர்த்துக்கல், மொரோக்கோ**

07.அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற திருமதி உலக அழகிப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட இலங்கைப் பெண்மணி?
**இசானி அமண்டா**

08.அணு பொறியியலில் முனைவர் பட்டம் பெற்ற ஒரே இலங்கையர்?
**துசாரா ரத்நாயக்க**

09.எந்த மத்திய கிழக்கு நாட்டில் உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் அரசாங்கத்தினைக் கவிழ்ந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர்?
**சிரியா**

10..புதிய வரிச் சீரதிருந்த முன்மொழிவுகளினை அறிவித்துள்ள ஆசிய நாடு எது?
**தென்கொரியா**

# மறுமையை நோக்கி



வறுமை செல்வமென்ற வேறுபாடு மரணத்துக்கில்லை...

வயதுகூட ஒரு பொருட்டாய்

அது பார்ப்பதில்லை...

பாதை தெளிவாய்த் தந்தானிறை
அருள் மறையினிலே...
பகுத்து உணர்ந்து நடப்போமே
நபி வழியினிலே...

வாழ்க்கை எனும் பயணம்
மறுமையை நோக்கி...
வாசம் செய்திடுவோம் நாமும்
பாவங்கள் போக்கி...

கல்லும் முள்ளும் இருந்திடும்
கடின பாதையிலே...
கவசமாய் ஆகிடும் என்றும்
இறையருள் பார்வையிலே ...

நற்குணங்கள் கொண்டால் செல்லும்
வழி எங்கும்...
நறுமணம் கமழும் சுவனம்
வந்து சேரும்...

தீவினை புரிகையில் தீயவர்
செல்லும் முடிவிடம்...
தீயினாலான நரகையன்றி
வேறெது நுழைவிடம்...

இம்மை ஆனது மறுமைக்கான
எமது விளைவிடம்...
இயம்பிடும் அமல்கள் இன்பமாய்
நல்விளைச்சலைத் தந்திடும்...



சுமைய்யா ஜெஸ்மி மூஸா



கலாபூஷணம் புசல்லாவை ஸ்மாலிகா
கண்டி.

# மனமாற்றம்

தேவைக்காக வங்கியில் இருந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு, வீதியில் இறங்கிய சலீம், எதிரே முஹகமதுவின் வாப்பா கரீம் மாமா வருவதைக் கண்டு மெல்ல நடக்கத் தொடங்கினான். அவரும் சலீமை கண்ட மகிழ்ச்சியில் கிட்ட வந்து "அஸ்ஸலாமு அலைக்கும், மகன் எப்படி இருக்கிறீர்கள்" என்றதும் பதிலுக்கு "வஅலைக்கும் சலாம்" என்று சலீம் கூறிவிட்டு, "நல்ல சுகம் மாமா" என்றான். மகன் எப்படி இருக்கிறார் என்று கேட்டதும், தலையாட்டினார். "நீங்களும் மாமியும் தனியாக வா மாமா இருக்கிறீர்கள். மகனுடன் இருக்கலாம் தானே" என்றான் சலீம் உரிமையுடன்.

சலீமும் கரிம் மாமாவின் மகன் முஹம்மதுவும் கண்டியில் கல்லூரி ஒன்றில் ஒன்றாக படித்தவர்கள். இருவரது வீடுகளும் கண்டி நகரை விட்டு சற்று தூரத்தில் தான் இருந்தன. ஒருவர் வீட்டுக்கு மற்றவர் சென்று வருவதும், ஒன்றாக விளையாடுவதும், படிப்பதும் சர்வசாதாரணம். அதனால் இரு வீட்டிலும் இவர்கள் இருவரின் மீதும் அதிக அன்பு நிறைந்திருந்தது.

படித்து முடித்த பின் முஹம்மது பிறந்த ஊரிலேயே ஆசிரியரானான். ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்குச் சென்று வந்த பல வருடங்களின் பின்பு அவனது திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. முஹம்மது அவனது தாயார் போல நல்ல நிறத்துடனும், அழகுடனும் இருந்தான். எல்லோரோடும் இனிமையாக பேசி பழகுவான். அவனது நடத்தை பற்றி எந்தவித குறையும் கூறுவதற்கு இல்லை. எனவே அவன் வேலை செய்த கல்லூரி அதிபர் மூலம் அவனுக்கு குருநாகல் பகுதியில் ஒரு பெண் அமைந்தாள். அவளது வாப்பா ஊரில் பெரிய முதலாளி. வாகனம், காணி, பூமி, வீடு என்று வளமாக இருப்பவர். அவருக்கு முதல் பார்வையிலேயே முஹம்மதுவை பிடித்து விட்டது. அவர் தன் மகளுக்கு ஒரு பெரிய வீடும், காணியும், நிறைய நகைகளும் கேட்காமலே சீதனமாக கொடுத்தார். பெண்ணும் அழகானவள் தான். இவர்களது திருமணத்தை கண்டு ஊரே வியர்ந்தது. இவர்களது திருமணம் முடிந்த பின்பு தான் சலீமின் திருமணம் அவனது சொந்த மதினியோடு முடிந்தது. சலீம் தனது வாப்பாவின் கடையை நடத்திக் கொண்டிருக்கிறான். அவனது வாப்பா திடீரென மாரடைப்பால் மௌத் ஆகியதும் கடையை நடத்தும் பொறுப்பும், தங்கையையும், தாயையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் அவனது தலையில் விழுந்தது. அரசாங்க உத்தியோகம் பெற அவனுக்கு தகுதி இருந்தும், வாப்பாவின் கடைசி ஆசையை கையில் ஏந்தி கொண்டான். அவனது வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் சென்று கொண்டிருந்தது. இப்பொழுது தான் அவன் மனைவி ஒரு குழந்தையை பெற்றெடுத்திருக்கிறாள்.

முஹமதுவைப்பற்றி கேட்டதும் மாமாவின் கண்களில் ஒருவித கலக்கந் தெரிந்தது. எதையோ மறைறக்க முயன்றும் அவரால் முடியவில்லை. "உன்னிடம் சொன்னால் என்ன சலீம், சீதனத்தையும் அழகையும் நம்பி நடந்த மகனது திருமணத்தால் எங்களை இழந்து விட்டதாகவே தோன்றுகிறது. ஆரம்பத்தில் எல்லாம் சுமூகமாக தான் இருந்தது. காலப்போக்கில் அவன் மனைவி, அவனை எங்களிடம் நெருங்க விடாமலே செய்து விட்டாள். எங்களுக்கு காசு கொடுத்து உதவுவதோ, எங்களை அடிக்கடி வந்து பார்ப்பதோ, நாங்கள் அங்கே சென்று அவர்களோடு இருப்பதோ அவளுக்கு பிடிக்கவில்லை. என்ன ஓதிப்படித்தாளோ தெரியவில்லை, அந்தஸ்து பார்ப்பதும், அவளது குடும்பப் பெருமை பேசுவதும் வழக்கமாகிவிட்டது. அவளது அந்தஸ்துக்கு நாங்கள் பொருத்தம் இல்லை போல, நாங்கள் ஏழைகள் தானே, பாவம் ஒன்றும் புரியாமல் என் மகன் அகப்பட்டுக் கொண்டான். அவன் மனதில் நிறைய கவலைகள் இருக்கிறன. ஒன்றும் செய்ய இயலாத நிலை" என்று முடித்தார். "நீங்கள் கவலைப்படாதீர்கள் மாமா நான் உங்கள் மகனை கண்டு இது பற்றி பேசுகிறேன்" என்று சமாதானப்படுத்திய சலீம், அவரிடம் இருந்து மன வருத்தத்துடன் விடை பெற்றான். அவனுக்கும் கடையில் நிறைய வேலைகள் அன்று இருந்தன.

சலீம் இது பற்றி பல நாட்களாக சிந்தித்துக் கொண்ருெந்த வேளை ஒரு நாள் தீடிரென, சலீமின் முன் முஹமது வந்து நின்றான். தன் தந்தையிடம் தன்னை பற்றி விசாரித்ததை அறிந்து மகிழ்ந்ததாக கூறிய அவன், தன் திருமணத்தைப் பற்றி கூறி விட்டு, ஆசிரியர் என்ற ரீதியில் பாடசாலையில் உள்ள ஆசிரியர்களிடம் இது பற்றி மனம் விட்டு பேச இயலாது என்று கூறியவன், என் மனைவி எனது உம்மா வாப்பாவோடு அன்பாக இல்லை, மதிப்பதும் இல்லை என்பதை கூறி வருத்தப்பட்டான். "பொறுத்து பொறுத்து பார்த்துவிட்டு இன்று அவளோடு பெரிய சண்டை போட்டுவிட்டு வந்தேன். இப்படி என் பெற்றோரை கணக்கெடுக்காதுவிட்டால் உன்னை பிரிய நேரிடும் என்று உறுதியாக கூறிவிட்டேன்" என்றவன் குழந்தை போல் கண்கலகினான். இவ்வளவு தூரம் பிரச்சனை பூதாகரமாக வளர்ந்துள்ளது என்பதை புரிந்து கொண்ட சலீம், "இப்பொழுதே என்னுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு, உன்னுடைய வீட்டுக்குப் போய், உன்னுடைய மனைவியோடு பேசுவோம். இதற்கெல்லாம் மனைவியைப் பிரிவார்களா, வருத்தப்படாதே" என்று ஆறுதலாக கூறிவிட்டு, அவனது காரிலேயே தனது வீட்டுக்குச் சென்று மனைவியையும் அழைத்துக்கொண்டு முஹமதுவின் வீட்டுக்குச் செல்ல தயாரானான்.

அனைவரும் காரிலிருந்து இரங்கிச்சென்று முஹமதுவின் வீட்டுக்கதவை தட்டியதும், அவன் மனைவி கதவை திறந்தாள். அவள் முகத்தில் சோகம் காணப்பட்டது. கண்கள் கலங்கியிருந்தன. கணவனை விட்டு பிரிக்க நாங்கள் வந்திருக்கின்றோமோ? என்ற சந்தேகம் அவள் முகத்தில் தெரிந்தது. சலீமின் மனைவிக்கு ஏற்கனவே பிரச்சினை தெரியும் என்பதால் அவளது கைகளை ஆதரவாக பிடித்துக்கொண்டு உள்ளே சென்றாள். சற்று நேரத்தில் இருவரும் ஒரு சிறிய பையுடன் வெளியே வந்தார்கள். "உங்கள் உம்மா, வாப்பாவைக் பார்க்கப் புறப்படுவோம்" என்று கூறியப்படி முஹமதுவின் மனைவியை தம்முடன் அழைத்துச்செல்ல தயாரானாள் சலீமின் மனைவி. எங்கள் இருவர் முகத்திலும் தெரிந்த ஆச்சரியத்தை அவர்கள் கணக்கெடுக்கவே இல்லை. கார் முஹமதுவின் பெற்றோரின் வாசலில் வந்து நின்றது. சத்தம் கேட்டு வெளியே வந்த முஹகமதுவின் உம்மாவும் வாப்பாவும் திக் பிரமை பிடித்தவர்களாக ஒரு கணம் நின்று விட்டு, மருமகளையும் சலீமின் மனைவியையும் அன்புடன் வரவேற்றனர். மாமி மருமகளையும் என் மனைவியையும் முத்தமிட்டாள். ஆனந்த கண்ணீர் அவளது கண்களில் வழிந்தது. இது எப்படி சாத்தியமானது? என்று கோப்பியை குடித்தப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது முஹமதுவின் மனைவி அனைவரையும் புன்சிரிப்போடு பார்த்தப்படி "நான் சில நாட்கள் மாமா, மாமியுடன் இருந்துவிட்டு வருகிறேன். நீங்கள் அல்லாஹ்வின் காவலில் சென்று வாருங்கள்" என்றவள், சலீம் காக்கா உங்களுக்கும் உங்கள் மனைவிற்கும் எப்படி நன்றி கூறுவது என்று தெரியவில்லை, ஆண்டவன் தான் உங்கள் இருவரையும் என்னிடம் அனுப்பியுள்ளான்" என்றவள் கண் கலங்கி சலீமின் மனைவியை ஆரத் தழுவி விடை பெற்றாள். முஹம்மதுவின் பெற்றார் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

காரில் வரும்போது சலீமின் மனைவி, இருவரையும் பார்த்தபடி "முஹமது தம்பி இப்போது உங்கள் அன்பு மனைவி ஆயிஷா தலைபிள்ளை உன்டாகியிருக்கிறாள். என்னிடம் தான் அதை முதலில் கூறி இருக்கின்றாள். இவ்வளவு நாளும் அவள் தன் பெற்றார் பற்றி மட்டுமே யோசித்துக்கொண்டிருந்தாள். கணவன் மீது அதிக பாசம் இருந்த போதும், தாய் வீடே அவளுக்கு மிக உயர்வாகத் தெரிந்தது. வசதியான வாழ்க்கை கண்களை மறைத்தது. சண்டை காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தால் கணவன் தன்னைவிட்டு பிரிந்து சென்றுவிடுவானோ? என்ற பயம் அவளை பயமுறுத்தியது. மிகவும் குழம்பிப்போனாள். கணவன் இல்லாத வாழ்க்கையை அவளால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. நாளை எனக்கு பிறக்கும் பிள்ளையும் இப்படி செய்யலாம் தானே என்று எண்ணினாள். தான் செய்த தவறுகளை நினைத்து மனம் குழும்பினாள். திருந்தி வாழ்வது ஆண்டவனுக்கு விருப்பமான செயல் என்று தொழுது இறைவனிடம் மன்றாடினாள். ஆதற்கேற்றாற்போல் நாங்களும் அவளை தேடி வந்து புத்தி சொன்ன போது நல்ல மனைவியான அவள், மாற்றத்தை விரும்பி ஏற்றுக்கொண்டு கணவனுக்கு ஏற்ற

மனைவியாக வாழ முடிவு செய்தாள்” என்று கூறினாள்.

“இந்த இடத்தில் நான் ஒன்று சொல்ல வேண்டும்” என்று சலீமின் நண்பன் வாயைத்திறந்தான், அவன் முகத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் காணப்பட்டது. “ஒருவருக்கு நல்ல நட்பு மிக முக்கியமானது என்பதை இறைவன் எனக்குக் காட்டிவிட்டான். மனமுடைந்து போன நிலையில், குடும்பமே சிதறியிருக்க வேண்டிய நேரத்தில் நீங்கள் இருவரும் வந்து கைக்கொடுத்தீர்கள். ஒருவருக்கு நன்மை செய்வதே உண்மையான நட்பு இப்படிப்பட்ட நண்பனை அடைந்ததற்காக நான் காலமெல்லாம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். அத்தோடு உங்களுக்கு இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்” என்று மனநிறைவுடன் கூறினான். அனைவரது மனதிலும் நிம்மதி காணப்பட்டது.






## முகம் பளபளக்க...

*சிறிதளவு பால், கால் ஸ்பூன் எலுமிச்சைசாறு, ஒரு ஸ்பூன் கடலை மாவு, சிறிது கஸ்தூரி மஞ்சள் சேர்த்து பேஸ்டாக கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து கழுவ வேண்டும்.

*பப்பாளி துண்டுகள், கற்றாழை ஜெல், சிறிது பால், கால் ஸ்பூன் சர்க்கரை ஆகியவை கலந்த பேஸ்டை 10 நிமிடங்கள் முகத்தில் மசாஜ் செய்து கழுவவும்.

## இஞ்சி வரப்பிரசாதம்..!

இஞ்சியை உடகொள்வது மன அழுத்தத்தைக் குறைக்கிறது மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இஞ்சியில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்டகள் அல்சைமர் போன்ற மனநோய்களைத் தடுக்க உதவுகிறது.

இஞ்சியில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்டகள் கொழுப்பைக் கரைப்பதால், எடையைக் குறைக்க உதவுகிறது. இஞ்சி வெப்பத்தை உருவாக்குகிறது, எனவே சளி மற்றும் இருமலை தடுக்க உதவுகிறது.

இஞ்சியை உடகொள்வது நீரிழிவு அபாயத்தைக் குறைக்க உதவுகிறது. இது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது. இஞ்சியில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் மூட்டுவலி நோயாளிகளுக்கு நிவாரணம் அளிக்கும்.

இஞ்சியில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்டகள், இயற்கையான டையூரிடிக்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்டகள் சருமத்தை ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் மாற்றுகிறது. இதனால் சருமத்தின் அழகு கூடுகிறது.





# மீண்டெழு பலஸ்தீன்

வான்மறை புகழ்ந்துரைக்கும்
அருள்மிகு தேசமே
வானவர் சிறகு விரித்த வளம்மிக்க
பூமியே

போராட்டமே வாழ்வாகிய
ஃமானியம் செழிக்கும்
இரும்புடல் தழுவிய
கண்ணீரின் தேசமே

காபன் காற்றுக்குள்
கண்கள் திறக்காத
பிஞ்சுகள் புதையுண்ட
பூலோக சுவனமே

விழிகளின் திரைக்காட்சியில்
குறிக்கப்பட்ட வழமைகளில்
செங்குருதியின் ஓட்டங்களுக்கு ஓய்வில்லாத பூமியே

வையத்து மனங்களில் உன்
சைத்தான் காடுகள்
சுடுகாடுகளாகும் பொழுதுகள்
இதயத்தைச் சுட்டெரிக்க மறுக்கவில்லை

மௌனிக்கும் பேரிச்சைத் தோப்புகளுக்குள்
மரணித்த தேகங்கள்
மண்ணுக்குள் உயிர் வாழ்கிறது

பலஸ்தீனே நீ பிரிக்கப்படவில்லை

உம்மத்தின் உயர்ந்த
பிரார்த்தனைகளில் உனக்கோர் தனியிடம்
உன் கண்ணீர் துடைக்கும் நடுநிசியின்

பிரார்த்தனைகள் தங்குதடையின்றி
அர்ஷின் கதவுகளைத் திறக்கும்

உன் வெற்றி நிச்சயிக்கப்பட்ட
ஏட்டில் எழுதப்பட்டுள்ளது
அக்ஸாவின் சாவிகள்
காஸாவின் கைகளுக்குள்
திறக்கப்படும் நாட்கள்
வெகு தொலைவிலில்லை

சடவாத இருளுக்குள்
உங்கள் கண்களே
விடியலின் ஓரத்தில்
விளக்குகளாய் ஒளிர்கின்றன
சிதைக்கப்பட்டது வாழ்வொழுங்கு
புதைக்கப்பட்டது ஒரு தேசத்தின் வரலாறு

இரும்பால் வார்க்கப்பட்ட
சகோதரத்துவம் இறைநம்பிக்கைக்குத் தீனி போடட்டும்
முன்வைத்த கால்களுக்கு பின்வைக்கத் தெரியவில்லை
நபிமார்கள் சுஹதாக்கள் வாழ்ந்து
மறைந்த புனித பூமியல்லவா

இறைத்தூதின் பரிமாறல்கள் நிகழ்ந்த
அழகிய தேசமே நிச்சயம்
நீ மீண்டெழுவாய்
ஆழமான நம்பிக்கை அழிவதில்லை இப்பூமியில்....



எஸ்.எம்.பெனாஸிரா
முஸ்லிம் ஹல்மில்லாவ,மதவாச்சி



# அதிக கவலையில் இருந்து மீள்வதெப்படி..?



ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் இரவும் பகலும் போல் மாறி மாறி வரக் கூடியவை.எனவே இன்பத்தில் துள்ளாமலும் துன்பத்தில் துவளாமலும் இருக்க கற்றுக் கொள்ளவதே முதிர்ச்சியடைந்த பக்குவப்பட்ட மனோபாவமாகும்.

கவலை என்பது எதிர் மறையான மனவெழுச்சியாகும். சந்தோஷத்தை இழந்த நிலையே கவலையாகும். அன்றாட வாழ்வில் நிறைவேறாத ஆசைகள் , எதிர்பார்ப்புகளை எண்ணி வருந்துதல். பிரிவுகள் இழப்புகளை எதிர்நோக்குதல். தேவையற்ற விடயங்களை நினைத்து வீணாக வருந்துதல், மற்றும் இன்னோரன்ன வேளைகளிலும் கவலையானது மனித மனத்தை ஆட்கொள்கின்றது.

மனித உள்ளம் எப்போதும் சந்தோஷமாக இருப்ப தையே விரும்புகிறது. ஆனால் கவலையையே அணிகலன்களாகச் சூடிக் கொள்கிறது.

பொதுவாக வாழ்க்கையின் ஒவ்வொரு கணத் துளியையும் சந்தோஷமாக கடந்து செல்ல வேண்டிய மனித இனம் தானாகவே தேவையற்ற கவலையை அள்ளி போர்த்திக் கொள்கிறது.

பொதுவாக கவலை என்பதை மூன்று வகையாக பிரித்து நோக்கலாம்

1. நாளந்தம் ஏற்படும் கவலைகள்
2. கடந்த காலம் பற்றிய கவலைகள்.
3. எதிர்காலம் பற்றிய கவலைகள்.

### நாளாந்தம் ஏற்படும் கவலைகள்

ஒரு மனிதன் தினமும் எதிர் கொள்ளும் பல்வேறு வகையான கவலைகள் இதற்குள் அடங்கும்.

மனித வாழ்க்கையில் நாளாந்தம் அத்தியாவசிய தேவைகள் ஆடம்பர தேவைகள் என்று ஏகப்பட்ட தேவைகள் ஏற்படுகின்றன. இவற்றை எப்படி அன்றாடம் நிறைவேற்றுவது ?

வருமானம் போதுமானதாக இல்லை. தன்னை மற்றவர்கள் மதிப்பதில்லை தனக்கு மட்டுமே வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தன் தலைவிதி மோசமானது. என்றெல்லாம் எண்ணி எண்ணியே அதற்காக கவலைப்பட்டு தனது அன்றாட மகிழ்ச்சியையும் பலர் அழித்துக் கொள்கின்றார்கள். இதை விடுத்து எது அத்தியாவசியம்?.. எது ஆடம்பரம்?.. எது உடனடி தேவை? என்று ஆராய்ந்து அதனை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். பொருளாதாரத்தை ஈட்டும் வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.முயற்சி, உழைப்பு, திட்டமிடல். சிறந்த மனப் பக்குவம், நேரான சிந்தனைய என்பவற்றின் மூலம் நாளாந்தம் நேரும் கவலைகளில் இருந்து மீள முடியும்

### கடந்த காலம் பற்றிய கவலை

இது தேவையற்ற கவலையாகும். கடந்த காலம் பற்றிய இழப்புக்கள், வடுக்கள் ,வேதனைகள் நிறைவேறாத காரியங்கள், ஏமாற்றங்கள் என்பவற்றை

எண்ணி கவலைப்படுபவை இதற்குள் அடங்கும்.

கடந்த காலம் பற்றி கவலைப்படும் போது நிகழ்கால சந்தோஷத்தை இழந்து விடுகின்றோம்.

கடந்து சென்ற விடயங்களை நினைத்துக் கவலைப்பட்டு அது பற்றிய ஏக்கம், தவிப்பு ஏமாற்றங்கள் என்பவற்றின் மூலம் மனதை அவதிக்குள்ளாக்குவது மிகப் பிழையான செயலாகும். இதன் மூலம் மனிதனுக்கு எதுவிதமான நன்மைகளோ நிகழப்போவதில்லை. எனவே கடந்துபோன விடயங்கள் கடந்து போனவைதான். கடந்தவற்றை மீளப் பெற முடியாது. வீணாக அவற்றை எண்ணி எண்ணி வேதனைப்பட்டு தமது மகிழ்ச்சியை அழித்துக் கொள்ளாமல் இருக்கும் பொழுதுகளை இன்பமாக கழிக்க வேண்டும்.

### எதிர்காலம் பற்றிய கவலை

நாளை என்னவாகுமோ...?எதிர் காலம் எவ்வாறு அமயுமோ .? என்று அச்சம் கொள்வதே இத்தகைய கலவையாகும். எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்று எண்ணி எண்ணி இன்றைய இப்போதைய சந்தோசங்களை தொலைத்துக் கொள்வது புத்திசாதுரியமான செயல் அல்ல. நாளை என்பது நம் கையில் இல்லை. நடப்பவை யாவும் நன்மைக்கே என்ற நல்லெண்ணம் கொண்டால் எல்லாம் நாளும் இன்பம் பூக்கும். அன்றாட வாழ்வில் கவலைப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகி விரக்தி அடைந்து தனது அழகான வாழ்க்கையையும் அற்புதமான மகிழ்ச்சியையும் அனேகம் பேர் தொலைத்து விடுகின்றார்கள். நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வில் எமக்கு வழங்கப்பட்டுள்ள அத்தனை விடயங்களும் வரப்பிரசாதங்களாகும். எனவே இருக்கும் இன்பங்களை தொலைத்து விடாமல் எப்போதோ நடக்கும் விடயங்கள் நிகழ்வுகளை பற்றி நினைத்து நினைத்து நேரத்தையும் பொழுதையும் வீணாக கழித்து விடாமல் வரமாகப் பெற்ற அற்புதமான பொழுதுகளை இன்பமயமாகக் கழிக்க வேண்டும்.

வாழ்க்கை என்பது எமக்கு கிடைத்த மிகப் பெரும் பாக்கியம் ஆகும் வாழ்வது ஒரே ஒரு முறை தான். அதனை மிகவும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் அனுபவித்து வாழ வேண்டும். உடலையும் உள்ளத்தையும் கவலைகளால் நிறைத்து விடக் கூடாது. உடல் உள ஆரோக்கியத்தை கெடுத்து ஒரு நோயாளியாக நம்மை நாமே மாற்றிவிடவும் முயலக் கூடாது.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கழா- கத்ர் என்னும் இறை ஏற்பாட்டை தமது நம்பிக்கைக் கூறாக கொண்டுள்ளனர். எனவே எந்த ஒரு மு.ஃமினும் தேவையில்லாமல் எதற்கும் துக்கப்படவோ கவலைப்படவும் மாட்டான் .நடப்பவை நன்மையாகவோ தீமையாகவோ இருந்தாலும் கூட அது இறைவனின் ஏற்பாட்டின் படியே நடைபெறும் என்று பூரண நம்பிக்கை கொண்டிருப்பதால் அதனை ஏற்று இன்பமாக வாழ்வான் .எனவே இத்தகையவன் சிறந்த நேர் மனப்பாங்கு கொண்டவனாக காணப்படுவான் .இது ஈமானின் பூரணத்துவத்திற்கு அத்தாட்சியாகும்.

இறையருளில் நம்பிக்கை இல்லாதவர்களே எடுத்ததற்கெல்லாம் கவலைப்பட்டு தனது சந்தோசங்களை அழித்து விடுவதுடன் வாழ்க்கை பற்றி நம்பிக்கை இழந்து போகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் தற்கொலை போன்ற கோழைத்தனமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு தம்மைத் தாமே அழித்துக்கொள்கின்றார்கள்.

எனவே இத்தகையவர்களைக் கண்டறிந்து சிறந்த முறையில் அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்க வேண்டும் .

### கவலையிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள்

- தமது வாழ்வின் ஒவ்வொரு படித்தரங்களையும் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.
- சவால்களை எதிர்கொள்ளும் திறன்களை வளர்க்க வேண்டும்.
- கடந்தவை பற்றிய கவலைகளை மறந்து நடப்பவை யாவும் நன்மைக்கே என்ற நேர் மனப்பான்மையை உருவாக்க வேண்டும்.
- தேவையற்ற விடயங்களை எண்ணி வருந்துவதில் பயனில்லை என்று நம்ப வேண்டும் .
- இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- இன்றைய பொழுது இன்பமயமானது. இக்கணத்தில் வாழும் வாழ்வே அற்புதமானது எனவே இந்த பொழுதை மகிழ்வுடன் கழிக்க முயல வேண்டும் .
- நாளைய நாள் நம் வசம் இல்லை. நாளைய நாளை நாளையே பார்த்துக் கொள்ளலாம் என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- நாளை நமதே.. நாளைய நாளை நலமாக வாழ்வோம் என்று நல்லெண்ணம் கொள்ள வேண்டும்.
- இறை நம்பிக்கையுடன் நமது நாட்களை கழிக்க வேண்டும்.
- தன்னம்பிக்கையுடனும் சுய உழைப்பு , சுயவிழிப்புணர்வோடும் நாட்களை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.
- எதனையும் எதிர்கொள்ளும் மனப்பாங்கும், தைரியமும் துணிச்சலும் வேண்டும்.

கவலை என்பது ஓர் உளநோயாகும் நமக்கு நாமே தேடிக் கொள்ளும் உளநெருக்கீடாகும். அதுமட்டுமன்றி சந்தோஷங்களை இல்லாமல் பெருந் சாபக் கேடும் அதுவாகும்.

அதுமட்டுமின்றி கவலை கொள்வது இயலாமை மற்றும் தோல்வி மனப்பாங்கின் வெளிப்பாடாகும்.

அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில் ஏற்பட்ட பல வீனமாகும். அதீதமாக கவலைப் படுபவர்கள் அல் லாஹ்வின் அருள் வடிவத்தில் நம்பிக்கையற்றவர்க ளேயாவர் தொடர்ந்தேர்ச்சியான கவலையானது தே வையற்ற முடிவுகளையும், ஈடு செய்ய முடியாத இழப்புகளையும் ஏற்படுத்தலாம் .

கவலை கொள்பவர்கள் தானும் கவலை கொள்வ-துடன் தன்னைச் சுற்றி இருப்போரையும் கவலை கொள்ள வைக்கின்றார்கள். தனது மகிழ்ச்சியை இழப்பதுடன் மட்டுமன்றி சுற்றி இருப்பவர்களின் மகிழ்ச்சியையும் அழித்து விடுகின்றார்கள்.

எனவே கவலை என்னும் பிழையான மன வெழுச்சியிலிருந்து அனைவரும் விடுபட வேண்டும். வாழ்க்கை பற்றிய நல்லெண்ணம் கொள்ள வேண்டும். சிறந்த நேர் மனப்பாங்கோடு தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் திட்டமிட்டு சந் தோசமாக கழிப்பதன் மூலம் சிறந்த உடல் உள சமூக ஆரோக்கியத்தை பெற்று இந்த அற்புதமான வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியும்.

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதும், நல்ல-தையே எண்ணுவதும், நேர் சிந்தனையுடன் பயணி-ப்பதும் கவலையில் இருந்து விடுபட வழி வகுக்கும்

எனவே கவலை என்னும் எதிர்மறை சிந்தனையை விட்டும் விலகி மகிழ்ச்சி நிறைந்த நேர்மறை சிந்தனை உள்ளவர்களாக எம்மை மாற்ற முயற்சி செய்வோம். அதுவே இருமை வாழ்விலும் இன்பம் சேர்க்கும்.



## பெண்களைப் பற்றிய 5 உளவியல் உண்மைகள்

1. ஒரு பெண்ணின் இதயம் ஆணின் இதயத்தை விட நான்கு மடங்கு மென்மையானது.

2. ஒரு பெண்ணின் தொடு உணர்வு ஆணை விட வலிமையானது.

3. ஒரு பெண் அழும்போது, அவளுடைய இதயத்தில் உள்ள ஒரு சிறிய நரம்பு பாதிக்கப்படும்.

4. அவள் ஏமாற்றத்தை சந்திக்கும்போது, அவள் 72 நாட்களின் நினைவை இழக்கிறாள்.

5. ஆண்களை விட பெண்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம்.



# வகுப்பறைக்கு வெளியே

ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்.
கிண்ணியா.

இயற்கையோடும், வாழ்க்கையோடும் நெருங்கிய தொடர்பு கொண்ட கலையை காலங்காலமாக வளர்த்துக் கொண்டே வரும் இலக்கியவாதிகள் பெருமைக்குரியவர்கள். போற்றப்பட வேண்டியவர்கள்.

இலக்கிய வாதிகளான எழுத்தாளர்களது சிந்தனை திறனில் உருவாகும் படைப்பாற்றலில் அனுபவம், ஆளுமை, எண்ணம் என்பன சீரான முறையில் பிரதிபலித்து மிக அழகான இலக்கியங்கள் தோன்றி சமூகத்துக்கு பிரயோசனம் அளிப்பதையும், அது அடுத்த தலைமுறையை நோக்கி மிக அழகாக நகர்வதையும் இன்றைய இலக்கிய வளர்ச்சியின் வெளிப்பாடாகவே நோக்கலாம்.

அந்த வகையில், கிழக்கிலங்கை திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவை சேர்ந்த பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான பாயிஸா அலி அவர்களின் "வகுப்பறைக்கு வெளியே" எனும் அனுபவப் பகிர்வு கட்டுரை நூல் அண்மையில் வாசிக்க கிடைத்தது.

அழகிய அட்டை படத்துடன், 133 பக்கங்களில், 39 கட்டுரைகளை தொகுத்து சிறந்த வாசிப்பிற்காக தந்திருக்கின்றார். இவர் நீண்ட காலம் (1987-ல்) இலக்கிய துறையில் தடம் பதித்து கவிதாயினி, இலக்கிய விமர்சகர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி, சிறுகதை தொகுப்பாசிரியர் என பல பரிணாமங்களில் மிளிர்பவர். 2011 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான "தமிழியல் விருது" கவிதைத் தொகுதிக்காக 2013 ஆம் ஆண்டு "அரச சாகித்திய விருது" கிழக்கு மாகாண சாகித்திய விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது எழுத்தாற்றலின் முதிர்ச்சியில் விளைந்த "வகுப்பறைக்கு வெளியே" எனும் நூலானது, தனது ஆசிரியப் பணிகளுடன் அன்றாட வாழ்வில் நடந்த நிகழ்வுகளையும், தனது அன்பான உறவுகளுடனான கடந்த கால பயணத்தையும், இலக்கியமாக்கி ,தான் பிறந்த ஊரையும், உறவையும், சமூகத்தையும் உயிராக மதிக்கும் தன்னை சுற்றியுள்ள பின் தங்கிய சூழலில் உள்ள மாணவச் செல்வங்களையும் ,நம் கண் முன்னே நிறுத்த முனைந்து வெற்றியும் கண்டிருக்கிறார்.

கிண்ணியாவின் பெண்கல்விக்கு வித்திட்டு வழிகாட்டிய "சித்தி டீச்சர்". என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் மர்ஹூமா சித்தி பரிதா அபூசாலி அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்திருப்பது கல்வி மேலும், ஆசான்கள் மேலும் இவர் வைத்திருக்கும் உயரிய எண்ணத்தை பிரதிபலிக்கின்றது.

தனது வாழ்வியலில் உள்ள அனைத்து அம்சங்களிலும் ,விசாலமான சமுத்திரம் போன்ற அனுபவங்களில் மிகச் சில துளிகளே இவை.பரவலாக எல்லா மட்டங்களிலும் இந்நூல் வாசிக்கப்படுவதே எனது அவா என்கிறார் .இலக்கிய ஆளுமைகள் இந்த நூலுக்கு வழங்கியிருக்கும் வாழ்த்துரை அணிந்துரைகளே வாசிக்க சுவாரசியமாக மிக அழகிய படைப்பாக திகழ்கிறது. பிரபல்யமிக்க மூத்த இலக்கியவாதியும்,

இலக்கிய வித்தகருமான மசூறா சுஹுர்தீன் (slpc ஸ்தாபகத் தலைவி)அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையில் நூலாசிரியரின் படைப்புகளைபாராட்டி, ஆசிரியப்பெருந்தகையாக , மிகுந்த மன ஆதங்கத்துடன் பேசியிருப்பதோடு, எல்லாம் நன்மைக்கே" என்பது தவிர்க்க முடியாத ஒரு தாரகமந்திரம் தான். எமது வாழ்வில் நடக்கின்ற அனைத்து சம்பவங்களும் காரண காரியங்களுடன் இறைவனால் விதிக்கப்பட்டது.

நாம் தான் ஒரு மரணம் நிகழ்ந்தாலும் கூட அதற்கு காரணம் ஒன்றை தயாராகி பரப்பி விடுகிறோம். உண்மையில் இறை நியதி. ஒருவன் துரோகித்தாலும் அவனை துரோகி என்னும் கருவியாக்கியவன் இறைவன் என்பதை சிந்திப்பதில்லை.என்று "கழாக்கத்ர்" பற்றி முஸ்லிம்களாகிய நாம் மிகத் தெளிவாக நம்ப வேண்டும் என்பதை அழகாக வலியுறுத்தி இருக்கிறார்கள்.

மரீனா இஸ்யாஸ் ஷா.ஃபி (பன்னூல் எழுத்தாளர்), பூங்கோதை (கலாஸ்ரீ ரஞ்சன்), அப்துல் மஜீத் நிஜாமுதீன், ஜே. எம் இஹ்சான் ஆகியோர் நூலைப் பற்றியும், நூலாசிரியர் பற்றியும் பேசி இருப்பது அருமை.

கிழக்கிலங்கியின் அரசியல் ஆளுமை மர்ஹூம் ஏ. எல். அப்துல் மஜீத் அவர்களின் வாழ்வியல் வரலாற்றின் சில பகுதிகளோடு ஆரம்பமாகும் இவரின் கட்டுரைகள், தொடர்ந்து அவருக்கு பிடித்தமான ஆளுமைகளுடன் நகர்கிறது. சுனாமி இயற்கை அனர்த்தம், கொரோனா தொற்று தந்த வலிகளும், இழப்புக்களும் நூலாசிரியரோடு, என்னையும் நூல் வாசிப்பாளர்களையும் கண்கலங்க வைத்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை. கடமை உணர்வு, பரஸ்பர உறவுகளின் அன்னியோன்யம் , வளர்ப்பு முறை, விடாமுயற்சி, பெற்றோரின் புரிந்துணர்வற்ற வாழ்வியலில் பிள்ளைகளின் சீரழிவு,

பாடசாலை விழாக்கள் , நிகழ்வுகள், என இந் நூலில் பொதிந்துள்ள படைப்புக்கள் அனைத்துமே இலக்கியப் பிரியர்களுக்கான பெரு விருந்து தான். மொத்தத்தில் "வகுப்பறைக்கு வெளியே" எனும் அனுபவப் பகிர்வு நூல் மூலம் பாயிஸா அலி அனைத்து இலக்கியவாதிகளினதும், வாசிப்பார்களினதும் பாராட்டை பெறுகின்றார்.

நீண்ட ஆரோக்கியமான ஆயுளுடன், மேலும் பல இலக்கியங்களை இலக்கிய உலகுக்கு தர வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் மனமார்ந்த வாழ்த்துக்களை நாமும் தெரிவிப்போம்.



# மனித நேயம்

விதையது துளைத்து
விருட்சமாய் வியாபிக்க...
முதற்காரணம் வகுப்பது
மண்ணின் ஈரமே...

மனமதில் சுரந்து
மகோன்னதம் பெருகவே...
நிமித்தமாய் ஆவது
நிகரற்ற மனிதநேயமே...

முள்ளும் மலராகும்
மூர்க்கம் அகன்றுவிடும்...
கல்லும் ஆங்கே
கசிந்து மிருதுவாகிடும்...

பூவுலகத் தேரும்
பழுதின்றிச் சுழன்றிடும்...
மனித நேயமொன்றே
மகத்தான அச்சாணியாகிடும்...

பாரினில் பாரியும்
பரிவுற்ற சிபியும்...
வரலாறான வகையது
வகுத்திட்ட பாதையே...

அன்னை தெரேசாவும்
அருமைத்தாதி நைட்டிங்கேலும்...
சரித்திரமாய் ஆனது
சாத்தியமாயிற்று அதனாலேயாம்...

பசுமையுலகு படைத்திடல்
வேண்டுமே...
உரமாய் நேயம்
உவந்தளிப்போம் நாளுமே...



பஸ்லா புர்ஸான்
காத்தான்குடி



# SLPC யின் ஆளுமை அறிமுகம்



**அறிவிப்பாளர்**
**ரம்சானா சமீல்**
**அக்கரைப்பற்று**

**நேர்காணல்**
**ஷாமென் நிஸாம்தீன்**
**கட்டுகஸ்தோட்ட**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்ப கல்வியை அக்/அர்-றஹீமியா வித்தியாலயத்திலும் உயர் தரக் கல்வியை அக்/ முஸ்லீம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையிலும் கற்று இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலைமானி பட்டதாரியாகவும் இருக்கின்றார்.

பாடசாலைக் காலங்களில் இருந்தே அறிவிப்புத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் பாடசாலையில் இடம் பெற்ற கலை,கலாசார நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கி அறிவிப்புத்துறை சார்ந்த பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

சிறந்த ஒலிபரப்பாளராக வர வேண்டும் என்ற தனது இலட்சியத்தின் திருப்பு முனையாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பிறை FM வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராக நிகழ்ச்சி தயாரிப்பாளராக, நிகழ்ச்சி தொகுப்பாளராக, நேர்முக வர்ணனையாளராக,நேர்காணலாளராக கடமையாற்றி பல்லாயிரக் கணக்கான நேயர்களின் அபிமானங்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள இவர்மேலும் முகநூல் தொலைக்காட்சிகளான Ritham TV, youths TV தமிழ், East 1st, வியூகம் போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களில் பகுதி நேர அறிப்பாளராக நியமனம் பெற்று பல்துறை ஆளுமைகளை செவ்வி காணும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி உள் நாட்டிலும் கடல் கடந்தும் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். இவற்றோடு பிறை FM வானொலியில் பல்லாயிரக் கணக்கானோரின் அபிமானம் வென்ற



"மகளிர் மட்டும்" நிகழ்ச்சியை மனம் கவரும் படி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி "பிறையின் குயில்" என்ற பாராட்டையும் பெற்றுள்ளதோடு

மேலும் ஹலோ பிறை, இடைவேளை, ரிதம், மாலை மருதம்,போன்ற நிகழ்ச்சிகள், வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகள்,போட்டி நிகழ்ச்சிகள்,வெளிக்கள நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் பிரதேசத்தில் நடைபெறுகின்ற கலை கலாசார நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி வருவதோடு

பல சமூக அமைப்புகளில் தலைவியாக செயலாளராக பொருலாளராக மற்றும் நிர்வாக உறுப்பினராகவும் செயற்பட்டு சமூகத்தில் நிறைந்த பயனுள்ள சேவைகளையும் புரிந்து வரும் இவர் **Sri Lanka Pen club** இன் முக்கிய உறுப்பினராக உள்ளார். இதோ இவருடனான செவ்வி..

## கேள்வி:1

**அஸ்ஸலாமு அலைக்கும், அவரி சஞ்சிகையின் ஆளுமை பகுதியில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. ஒரு கவிதாயினியாக, அறிவிப்பாளராக என பல துறைகளிலும் காலூன்றி சாதனை படைத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு எமது பென் கிளப் அமைப்பின் சார்பில் வாழ்த்துக்கள். உங்கள் இலக்கியப் பிரவேசம் பற்றி எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்...**

வ அலைக்குமுஸ்ஸலாம் வறஹ்மத்துல்லாஹி வபறகாத்துஹு..

முதலில் அவரி சஞ்சிகையின் ஆளுமைப் பகுதியில் என்னையும் தேர்ந்தெடுத்தமையை இட்டு மிக்க மகிழ்ச்சி அடைவதோடு முதலில் எமது அமைப்பின் தலைவி மஷூறா சுஹூறுத்தீன் அவர்களுக்கும், அவரி இதழின் ஆசிரியை மற்றும் என்னை சிறப்பான முறையில் நேர்காணல் செய்யும் அன்பு சகோதரி ஷாமென் நிஷாம்டீன் அவர்களுக்கும் முதலில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கிறேன்..

எனது இலக்கிய பிரவேசத்தை நோக்குகின்றபோது தான் ஒரு அறிவிப்பாளினியாக நிகழ்ச்சிகளைப் படைக்கும் போது மட்டுமல்ல எமது சமூகத்திலுள்ள ஆற்றலுள்ள கவிஞர்களின் நூல் வெளியீட்டு நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கும் போதும் எனக்குள்ளே புத்துணர்வு தோன்றியதைக் கண்டேன்.இந்த சந்தர்ப்பத்தில் 2021 ம் ஆண்டில் எமது சிறீலங்கா பென்கிளப்பில் தானும் ஒரு அங்கத்தவராக அறிமுகமானேன். இதில் எமது அங்கத்தவர்களால் நடாத்தப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் பார்க்கும் போது மட்டுமல்ல இவ்வமைப்பினால் வெளியிடப்படும் நூல்கள் மற்றும் அவரி சஞ்சிகை போன்றவற்றைப் பார்க்கின்ற போதும் தானும் கவிதைகளைப் படைக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. இந்த எண்ணத்தை பிரதி பலிக்கும் வகையில் சிறு சிறு கவிதைகளை எழுத ஆரம்பித்து எனது முகநூலில் பதிவேற்றி வந்துள்ளேன்..இதனைத் தொடர்ந்து ஊவா சமூக வானொலியில் ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கம் ஒன்றிற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல மேடை நிகழ்வுகளிலும் கவியரங்குகளில் பங்கு பற்றி இருக்கின்றேன். மேலும் ஐம்பதுக்கும் அதிகமான கவிதைகளை எழுதி எனது முகநூலில் பதிவேற்றம் செய்திருக்கிறேன்.இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுவதற்கான முயற்சிகளில் இருக்கிறேன்..

எனது கவிதைகள் எமது அமைப்பினால் வெளியிடப்படுகின்ற அவரி மற்றும் முத்தமிழ்க் கலசம் ,கீறல் போன்ற சஞ்சிகைகளிளும் இமயம் தழுவும் இறக்கைகள் என்ற மொழிபெயர்ப்புக் கவிதை தொகுதியிலும் வெளிவந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். சிறீலங்கா பென்கிளப்பினால் 2024 ம் ஆண்டு மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று அதற்கான கௌரவத்தையும் பெற்றிருக்கின்றேன்.. தான் ஒரு அறிவிப்பாளராக மட்டுமல்ல சமூக சேவகராக மட்டுமல்ல பல பாத்திரங்களாக செயற்பட்டு வரும் இந்நிலையில் இலக்கியத்திலும் சஞ்சரித்துவருவதில் மகிழ்ச்சியடைகின்றேன் ..

## கேள்வி:2

**சிறந்த அறிவிப்பாளராக சிறந்த கவிதாயினியாக வலம் வந்து கொண்டிருக்கும் உங்களில் கவிதாயினியா, அறிவிப்பாளினியா உங்களுள் சிறந்தவராக நினைக்கின்றீர்கள்.?**

என்னைப் பொறுத்தவரை அறிவிப்புத் துறையில் முதலில் கால் பதித்தது மட்டுமல்ல என்னைப் பலருக்கும் அறியவைத்ததும் இந்தத் துறையே.

படிக்கின்ற காலத்தில் இருந்து எனது இலக்குகளில் ஒன்றாக இந்தக் கனவிருந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பிராந்திய சேவையாக பிறை FM வானொலியை அக்கரைப்பற்றுக்கு கொண்டு வந்தது எனது ஆசைக்கு அங்கீகாரமாக அமைந்திருந்தது. அறிவிப்பாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து தேர்ந்தெடுக்கப்பட்டு 2007- இற்றைவரை கடமையாற்றி வருகின்றேன்..இது ஒரு உற்சாகம் தரும் சேவையாகவும் இதனூடாக பல புதுமைகளைப் படைப்பதோடு புதிய புதிய உள்ளங்களையும் இடங்களையும் காணக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறேன். என்னை ஒரு சிறந்த ஆளுமையுள்ள பெண்ணாக அடையாளம் காட்டுவதற்கும் இந்த பணியே வாய்ப்பளித்தது.பெறுமதியான நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கும் சந்தர்ப்பங்களும் கிடைப்பதோடு உயர்மட்டங்களில் இருப்பவர்களின் அறிமுகங்கள்,நட்புக்களும் கிடைத்ததைஇட்டும் சமூகத்தில் எனக்கென்று ஒரு உயர்ந்த அந்தஸ்து கிடைக்கக்

கூடிய அளவுக்கு இறைவன் வழியமைத்துள்ளான் அல்ஹம்துலில்லாஹ்..

அறிவிப்பாளினியாகதொகுததளித்தபோது கவிஞர்களின் கவிதைகளைப் படிப்பதும் புத்தகங்களை வாசிப்பதும் தேடுவதிலும் அதிகமான நாட்டம் இருந்தது..

இதுவே நானும் எழுத வேண்டும் என்ற ஆசையைத் தூண்டி அதற்கு களம் கொடுத்ததுவும் அறிவிப்புத் துறையாக இருந்த போதும் கவிதைத் துறை இதனுடன் பின்னிப் பிணைந்ததாக எனக்கு வாய்ப்புக்களை தருவதால் இரண்டையும் இரு கண்களாகவே பார்க்கின்றேன்..

## கேள்வி:3

**அறிவிப்பாளினி எனும் பொழுது பல முட்டுக்கட்டைகளை பல தடைகளை தாண்டியே பெண் அறிவிப்பாளினிகள் நிடித்து நிற்க முடிகிறது. நீங்கள் கடந்து வந்தது முட்பாதையா..மலர் பாதையா.. எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்..**

நான் ஒரு சிறந்த அறிவிப்பாளராக இருந்தாலும் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது அதிகம் இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் இத்துறையை சாதாரணமான ஒன்றாகவே எண்ணி கால் வைத்தேன். இந்த கால கட்டங்களில் எனக்கு எனது குடும்பம் ஆதரவளித்த போதும் திருமணத்திற்குப் பிறகு பரிபூரண ஆதரவையும் ஒத்துழைப்புகளையும் எனது அன்புக் கணவரின் மூலம் பெற்றுக்கொண்டேன்.

காலம் செல்லச் செல்ல எனது நிகழ்ச்சிகளைக் கேட்கும் நேயர்கள் சிரேஷ்ட அறிவிப்பாளர்கள் வழங்கிய ஆதரவுகள் என்னை இன்னும் இன்னும் வளரச் செய்ததுடன் எனக்கென்று உயர் அந்தஸ்து கிடைக்கும் அளவுக்கு மகிழ்ச்சியான தருணங்களாக அமைந்திருந்தன.

ஏராளமானவர்கள் எனது திறமையை இனங்கண்டு வானொலியில் மட்டுமல்ல வெளிக்கள நிகழ்ச்சிகளுக்கும் களம் தந்து வாய்ப்புக்களை வழங்கியது மட்டுமல்லாமல் அரச மற்றும் அரச சார்பற்ற விருதுகளுக்கும் பரிந்துரை செய்தனர். விருதுகள் பெறும் செவவிகள் காணப்படும் சந்தர்ப்பங்கள் எல்லாம் பாதை மலர்ப்பாதையாக மகிழ்ச்சி தந்தாலும் களவிஜயத்தில் உள்ள சிரமம் ,அகால வேளைகளில் நிகழ்ச்சிகளில் தனித்து பணியாற்றுவதிலுள்ள சிரமங்கள் ,தகவல்களைப் பெறுவதிலுள்ள சிரமம், பாலியல் தொடர்பான விழிப்புணர்வு,குழந்தை வளர்ப்புப் பிரச்சினை ,உண்மைக்கருத்துக்களைத் துணிந்து வெளிப்படுத்த முடியாத நிலை புரிதலற்ற நேயர்களின் நையாண்டிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்பன மன உளைச்சல்களை தருவன. ஆண் அறிவிப்பாளர்களோடு சமமாய் பணியாற்றக் கூடிய ஆற்றல் இருப்பினும் சமூக விமர்சன அச்சம் சார்ந்த நிர்ப்பந்தங்களும் ஆண்களுக்கு ஈடான கொடுப்பனவுகள் வழங்கப் படாமல் குறைந்த கொடுப்பனவு பெறல், மேலும் அதே துறையில் இருப்பவர்களால் வீசப்படும் விமர்சனங்கள், போட்டிகள் ,பொறாமைகள் போன்ற தடைக்கற்கள் இப்பாதையைக் கடக்கும் போது முட்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. கடந்து வரும் பாதை முட்களாக இருந்தாலும் முட்களையும் மலர்ப்பாதையாக்கி முடியுமானவரை வெற்றி கண்டுள்ளேன்.





## கேள்வி:4

**அறிவிப்பு என்னும் பொழுது தமிழ் உச்சரிப்பு, குரல் வளம் இரண்டுமே முக்கியத்துவம் பெறுகிறது. தற்போதைய காலகட்டத்தில் இவை இரண்டும் தவிர வேறு ஏதாவது தாக்கம் செலுத்துகிறதா..?**

தமிழ் மொழியார்வம், ஆழமான வாசிப்பு, தேடல்கள்,முறையான பயிற்சி, கணினி சார் பயிற்சி, இணைய தொழில் நுட்பம் கட்டாயம் தேவை அத்தோடுபொது அறிவு, சமய அறிவு, சினிமா தகவல்கள், அரசியல் நிலவரங்கள், உலக நடப்புகள் தெரிந்திருக்க வேண்டும் வெறுமனே குரலும் உச்சரிப்பு மட்டும் போதாது. இவற்றோடு சமயோசிதமாக சிந்திக்கும் தன்மை போன்றன முக்கிய அம்சங்களாகக் காணப்படுவதுடன் ஒருவர் அறிவிப்பாளராக வரவேண்டும் என்றால் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் கட்டாயம் தமிழ் மொழியில் விஷேட சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்..

## கேள்வி:5

**இன்றைய காலகட்டத்தில் எமது முஸ்லிம் இளம்பெண்கள் அறிவிப்பு துறையிலும் ஊடக துறையிலும் மிகுந்த ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அதே நேரம் அவர்களுக்கான களங்களும் நிறையவே கிடைக்கின்றன. அவர்களும் இத்துறையில் மிளிர்வதற்கும் தங்களுக்கென தனி பாணியை அமைத்துக் கொள்வதற்கும் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

எவ்வளவு தான் முக்கியமான செய்தியாய் இருந்தாலும் மார்க்க விழுமியத்தை மலினப்படுத்தக் கூடாது. ஷரீஆவுக்கு மாற்றமாக ஒரு போதும் பேசக்கூடாது. நிகழ்ச்சி கவர்ச்சியாய் இருக்கவேண்டும் என்பதற்காக விரச உணர்வுகளை குரலால்வெளிப்படுத்தக் கூடாது. தான் ஒருபெண் என்பதை ஒவ்வொரு வினாடியும் நினைவு படுத்திக் கொள்வது அவசியமானது.ஆண் நேயர்களுடன் மற்றும் அன்னிய மதப் பெண்களுடன் உரையாடும் போது சமூக கட்டமைப்புக்கு களங்கம் ஏற்படாத வகையிலும் சமய கோட்பாடுகளுக்கு இழுக்கு ஏற்படாத வகையிலும் அறிவிப்புகள் இருத்தல், மகிழ்ச்சி சோகம் அதிசயம் பிரமிப்பு நகைச்சுவை போன்ற உணர்வுகளை மொழியால் வெளிப்படுத்தல். நாம் எந்த நிலையில் இருந்தாலும் நடுநிலையில் அறிவிப்பு செய்தல் ஒரு போதும் நம் உணர்ச்சிகள் பக்கச்சார்பை பறைசாற்றக் கூடாது.

## கேள்வி:6

**பல அரச, தனியார் விருதுகளுக்கு சொந்தக்காரரான நீங்கள் அது பற்றி எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்..**

விருதுகள் எனும் போது எமது திறமைகளுக்கும் ,எமது சேவைக்கு கிடைக்கின்ற வெற்றிகளுக்கான அங்கீகாரங்களாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இளங்கலைஞர் விருதினை ஊடகத்துறைக்காக 2022 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டேன். இது எனக்கு கிடைத்த அரச விருதாகக் காணப்படுகிறது.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பினால் ccas campus நடத்திய விருது வழங்கல் நிகழ்வில் சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருதினையும் J.J foundation ஊடாக வழங்கிய மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சியில் சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருதினையும் மேலும் அவர்களின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விருது வழங்கல் நிகழ்வில் மேலும் இரண்டு முறைகளாக 4 முறைகள் சிறந்த அறிவிப்பாளருக்கான விருதுகளையும் பெற்றிருக்கிறேன்.

சிறீலங்கா பென்கிளப்பினால் மூன்று முறைகள் இலக்கியத் துறையில் சிறந்த சேவையை ஆற்றியமைக்காகவும் ஒருமுறை இளங்கலைஞர் அரச விருதினை பெற்றதைப் பாராட்டி அதற்கான சிறந்த கௌரவிப்பு லக்ஸ்றோ மீடியாவின் விருது வழங்கல்கள் நிகழ்வில் சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருதினையும் “கலை முத்து” என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்..

கனடாவில் இருக்கும் ziathoon nhar foundation இனால் நடாத்தப்பட்ட விருது வழங்கல் நிகழ்வில் சிறந்த பெண் குரலுக்கான விருதினைப் பெற்றுக் கொண்டேன்.

R.J மீடியாவினால் நடாத்தப்பட்ட சிறந்த கலைஞருக்கான விருது வழங்கல் நிகழ்வில் கௌரவ அதிதிகளுள் ஒருவராக கலந்து கொண்டதோடு சிறந்த பெண் குரலுக்கான விருதினையும் பெற்றுக் கொண்டேன்.

முகநூல் தொலைக்காட்சி சுவையாயஅ TV இனால் நடாத்தப்பட்ட சிறந்த கலைஞர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வில் 2024 இல் young model talent விருதினையும் 2025 இல் தேசிய வானொலிகளில் கடமையாற்றும் அறிவிப்பாளர்களுக்கான Golden voice (தங்கக் குரலுக்கான) விருதினையும் பெற்றுக் கொண்டேன் .

அக்கரைப்பற்று சமுர்த்தி திணைக்களத்தினால் 2022 இல் அரச விருதான இளங்கலைஞருக்கான விருதினைப் பெற்றமையைப் பாராட்டி கௌரவமும் விருதும் பெற்றுக் கொண்டேன்.

## கேள்வி: 7

SRILANKA PEN CLUB **ஆரம்பகால உறுப்பினராக, சிறந்த செயற்பாட்டாளராக, இருக்கும் நீங்கள் எமது அமைப்பு பற்றி ஒரு சில வார்த்தைகள் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

உண்மையில் எமது சமூகத்தில் இலைமறை காயாக இருக்கும் ஆளுமைகளை இனங்கண்டு கொள்வதற்கு இந்த அமைப்பு பெரிதும் வழிவகுக்கின்றது.

அதிலும் சிறீலங்கா பென் கிளப்பானது தனி முஸ்லீம் பெண் ஆளுமைகளை அதிகமாகக் கொண்டது. இவ்வமைப்பில் நானும் அங்கத்தவராய் இருப்பதில் பெருமையடைகிறேன்.

இவ்வமைப்பின் கௌரவ தலைவி இலக்கிய வித்தகர் மஷூரா சுஹூறுத்தீன் அவர்களே ஒரு சிறந்த சிரேஷ்ட எழுத்தாளர் மட்டுமல்ல பல துறைக் கலைஞராகக் காணப்படுவதாலும் அதன் நிர்வாக உறுப்பினர்களும் சிறந்த ஆளுமைகளைக் கொண்டுள்ளமையும் மற்றவர்கள் மத்தியில் வியந்து பார்க்கும் ஒரு அமைப்பாக காணப்படுகின்றது.

நாளாந்தம் இவ்வமைப்பின் அங்கத்தவர்களால் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளும் ,இவ்வமைப்பினால் வெளியிடப்படும் அவரி காலாண்டு சஞ்சிகை , சிறுகதைத் தொகுப்பு நூல்,கவிதைத் தொகுப்பு,

ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதை தொகுப்பு, போன்றவைகள் அனைத்து ஆளுமைகளுக்கும் தமது ஆற்றல்களை வெளிக்காட்ட சிறந்த களமாக அமைந்திருக்கின்றன.ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி மிகுந்தவர்கள் இவ்வமைப்பில் இருப்பதனால் அவை நாளாந்த நிகழ்ச்சியில் பகிரப்படும் போது அவர்களின் ஆற்றல்கள் வெளிப்படுவதுடன் மற்றவர்களுக்கு அது பலனளிக்கும் வகையிலும் தெரியாதவற்றை கற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது..

இவ்வமைப்பினால் காலாண்டுக்கொரு முறை வெளி வரும் அவரி சஞ்சிகை ஆனது கிழக்கு மாகாண சாகித்திய விருதினைப் பெற்றிருப்பது இந்த அமைப் பின் வளர்ச்சியையும் பெருமையையும் தருகின்றது.

எனவே இப்படியான இவ்வமைப்பில் நானும் ஒரு அங்கத்தவராக மட்டுமல்ல நிர்வாக சபை உறுப்பின ராகவும் இருப்பதில் பெருமையடைகிறேன்.

இவ்வமைப்பானது ஆற்றலுள்ள பெண்களுக்கு களம் அமைக்கும் பணியில் வெற்றி கண்டு வருகிறது.எமது அமைப்பு மென்மேலும் பிரகாசிக்க இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

முகநூல் தொலைக்காட்சி Ritham TV இனால் நடாத்-தப்பட்ட சிறந்த கலைஞர்களுக்கான விருது வழங்-கல் நிகழ்வில் 2024 இல் young model talent விருதினையும் 2025 இல் தேசிய வானொலிகளில் கடமையாற்றும் அறிவிப்பாளர்களுக்கான Golden voice (தங்கக் குரலுக்கான) விருதினையும் பெற்றுக் கொண்டேன் .

அக்கரைப்பற்று சமுர்த்தி திணைக்களத்தினால் 2022 இல் அரச விருதான இளங்கலைஞருக்கான விரு-தினைப் பெற்றமையைப் பாராட்டி கௌரவமும் விரு-தும் பெற்றுக் கொண்டேன்.





## மிளகு துக்கடா செய்வது எப்படி ?....

**தேவையானவை**

**கோதுமை மாவு – ஒரு கப்,**

**மைதா மாவு – ஒரு கப்,**

**மிளகுத்தூள் – 3 டீஸ்பூன்,**

**நெய் (அ) வனஸ்பதி – கால் கப்,**

**பெருங்காயத்தூள் – அரை டீஸ்பூன்,**

**எண்ணெய், உப்பு – தேவையான அளவு.**

**செய்முறை :**

நெய் (அ) வனஸ்பதியுடன் உப்பு சேர்த்து நன்றாகக் குழைக்கவும். இதனுடன் கோதுமை மாவு, மைதா மாவு, மிளகுத்தூள், பெருங்காயத்தூள் சேர்த்து தேவையான தண்ணீர் விட்டு பிசையவும். மாவை மெல்லிய சப்பாத்-தி போல் தேய்த்து, கத்தியினால் குறுக்கு நெடுக்காக டைமண்ட் வடிவ துண்டுகளாக வெட்டி, காயும் எண்ணெயில் பொரித்து எடுக்கவும். மிளகு துக்கடா பறிமாற ரெடி.

# நடைப் பிணமானேன்

உறவென்று வந்து உறவாடிய உறவுகள்
உயிர் போல பழகிய பின்பு
உள்மனதில் விசமென்று அறிந்த நொடி
உள்ளமே வெடித்துச் சிதறியது..

எதுவும் தேவையில்லை நற்குணமே போதுமே
என்று தேவை முடியும் வரை
தேன் போல் பேசிய நட்புகள்
தேடிப் போயும் கிடைக்காமலான
கணங்கள்..

ஒன்றாக பணிபுரிந்து பலவிடயம் பகிர்ந்து
ஒரே தட்டில் உணவும் உண்டு
ஒரே மாதிரி ஆடைகளும் அணிந்து
குத்திவிட்டு கோலம் பார்த்த போது
குற்றுயிராக உடல் மட்டும் நின்றதே..

பத்திரமாய் அழைத்துச் செல்கிறேன் என்று
பாதியிலே பாலியல் கொடுமை செய்தாய்
பாவம் அந்த பிஞ்சு மனசு
பரிதவித்தே இருந்ததே நம்பியதின் விளைவாலே..

இரகசியமாக நம்பிச் சொன்ன விடயங்கள்
பரகசியப்படுத்தி அவமானத்தை பரிசாக கொடுத்த போது
அவனியில் உயிர் வாழ்வதே வெறுத்து
அடியோடு சாய மனம் ஏங்குதே..

அன்பாகப் பழகி அரட்டைகள் அடித்து
அலப்பறைகள் செய்து அலங்கரித்த உறவுகள்
அரை மணி நேரத்தில் இறைப்பயணம் என்றதும்
மூச்சு முட்டி பேச்சு

ஒவ்வொரு துரோகமும் ஒவ்வொரு விதமாய்
எண்ணிப் பார்க்கவே முடியாத கோணத்தில்
அம்பில் வில்லாகி எறியப்படும் போது
ஒவ்வொரு நொடியும் நடைபிணமாகிறேன் வையகத்திலே..

ஜஸூரா ஜலீல்
மலேசியா



# வீழ்வதெல்லாம்...!

எஸ். ஃபாயிஸா அலி.
கிண்ணியா

எனக்கு அவரை கடந்த பத்து வருடங்களாக மட்டுமே தெரியும். ஆனாலும் இன்று அவர் தனது 36 வருடக் காதல்கதையை சொன்னபோது அதிர்ந்து போனேன்.

இன்றைக்கு போலவே இருக்கிறது. அவரை முதன் முதலில் சந்தித்த அந்த நாள். முன்னுக்கு மடிக்கணனியும் ரெண்டு கைகளிலும் ரெண்டு ஃபோன்களுமாய் மாறிமாறி ஆங்கிலத்திலும்,சிங்களத்திலுமாய் உரையாடிக் கொண்டிருந்தார்.

ஒரு பிரபல தனியார் நிறுவனத்தின் பொறுப்பான பதவியில் இருப்பவர்.என்றைக்கோ ஒன்றாய் பணிபுரிகையில் அந்த மனிதரின் நற்பண்புகளில் கொண்ட ஈர்ப்பில் தொடங்கிய நட்பு, காதலாகி...20 வருடக் காத்திருப்பில் திருமணம் கைகூடி வந்திருக்கிறது. ஆனாலும் அதற்கிடையில் அவரின் கணவரோ இவரிடம் நம்பிக்கையை மட்டும் விதைத்தபடி தன் பெற்றோரின் விருப்பம், வசதிக்கேற்ப இன்னொரு பெண்ணின் துணைவராகவும் மூன்று பிள்ளைகளின் தகப்பனாகவும் மாறி விட்டிருந்தார்.அப்பவே இவர் விழித்துக் கொண்டிருக்க வேணாமா..?

பாவம் அவரின் கண்ணை மறைத்துவிட்டது அவர் காதல் என்று நம்பிய ஒன்றைத் தவிர வேறென்னவாக இருந்திருக்கும்..?

இடையில் அவரின் தொழில்,வியாபாரம் வீழ்ந்தும்,துணைவியார் கருத்து முரண்பாடுகளில் அவரை விட்டும் பிரிந்தும் தனித்து வாடிக் கொண்டிருந்த வேளையில்தான் மறுபடியும் இவரின் நினைவு வந் திருக்க வேண்டும். அடைக்கலம் என்று ஓடி வந்திருக்கிறார். ஆனாலும் அவ்வேளை இவருக்கு இவரின் நிறுவனம், தனது வளைகுடாவில் உள்ள கிளையொன்றுக்கு நிறைய சம்பளமும், சலுகைகளுமாய் முகாமையாளராய் பதவியுர்வு கொடுத்து அனுப்ப ஆயத்தமாகி இருந்தது.

உண்மைக்காதல் நிறைவேறியதாக இவரும் ஆனந்தக்கண்ணீர் விட்டபடி அதைத் தட்டிக்கழித்து விட்டு பாவம் முப்பதுகள் கடந்தபின்னரே இல்லற வாழ்க்கைக்குள் இணைந்திருக்கிறார். இவரின் அன்பும் விடாமுயற்சியும்,ஒத்துழைப்பும் வீழ்ந்து கிடந்தவரை மறுபடியும் தூக்கிவிட செய்து,தனக்குக் கிடைத்த பதவி உயர்வு மட்டுமல்ல செய்த வேலையையும் துறந்து... இந்தப் பத்துவருடகால சந்தோசமான இல்லறம்.என்றாலும் மறுபடியும் கணவரின் திடீர் வியாபார வீழ்ச்சி தந்த பொருளாதாரச் சிக்கலில் இவர் திரும்பவும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய சூழ்நிலை. (சிலவேளை அதுகூட இவரை நம்பவைத்து வேலைக்கு அனுப்ப நடந்த நாடகமோ என்னவோ.)

இந்த நேரம் பார்த்து இவர் கணவருக்கு ஏற்பட்ட சிறிய சுகவீனம் ஒன்றைக் காரணம் காட்டியே பிள்ளைகள் அவரைத் தங்கள் பக்கம் அழைத்துக்கொண்டதாக கவலைப் பட்டார். ஊர், உறவுகள்,குடும்பங்கள் அவரின் பிள்ளைகளின் உணர்வுகளில் நஞ்சைக் கலந்து விட ஏதோ ஒரு வகையில் மறுபடியும் அவர் பிள்ளைகளின் சாட்டில் இவரைத் தனியே விட்டுப் பிள்ளைகளிடம் ஓடியிருக்கிறார் போலும். இத்தனைக்கும் அவர் தனது முதல் மனைவி, பிள்ளைகளுக்கு

கொடுக்க வேண்டிய எந்த விடயத்திலும் தான் தலையிடுவதில்லை என்றும் அவர்களின் பிறந்த நாளைக்கூட தான்தான் ஒவ்வொரு தடவையும் ரிமைன் பண்ணி வாழ்த்து சொல்ல வைப்பதாகவும் ஒரு குழந்தையைப் போல என்னிடம் ஒப்புவித்த போது,உண்மைக்கு எனக்குமே அழுகை வந்தது.

அவரோ பிறரிடம் தான் மறுபடியும் இப்போதுதான் அமைதியாய் தன் பிள்ளைகளோடு வாழ்வதாக சொல்லிக் கொண்டிருக்க, இவரோ பாவம், இன்னமும் தனது கணவர் தன்னிடமே வந்துசேர வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். எனக்கென்னவோ இவர் இவ்வளவு நாளும் அன்பு காதல் என்ற பெயரில் ஏமாற்றப் பட்டிருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது.

தன்னை உரிய காலத்தில் திருமணம் செய்திருந்தால் தனக்கும் கடைசி காலத்தில் கவனித்துக் கொள்ள வாரிசுகள் இருந்திருக்குமே..என்பதும்..

இன்றைக்கு தன் வயதொத்தவர்கள் பணி ஓய்வு பெற்று சொந்தவீடு, வாகனம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்க, தான் மட்டும் எதுவுமே இல்லாமல் மறுபடியும் கஷ்டப்பட்டு வேலைக்கும் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டே போன அந்த சகோதரி இடையில் கலங்கி அழுதபோது மௌனமாக கேட்டுக் கொண்டு இருப்பதைதவிர எனக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இருக்கவில்லை.

எனக்கென்றால் இனியும் அவரை நம்பிக்கொண்டிருக்காமல் இந்த சகோதரி தனது மிச்சக்காலத்தையேனும் தனக்காய்.. நிம்மதியாக வாழ்ந்து முடிக்கலாம் என்றே தோன்றுகிறது .

அதெப்படி இந்த ஆண்களால் நினைத்த நேரத்தில் இணையவும் விலகவும் முடிகிறதோ தெரியவில்லை.

உண்மையில் அழகான,ஆளுமை நிறைந்தபெண்கள் தோற்று வீழ்வதெல்லாம் இந்தக் காதல் எனும் ஒற்றை மாயச்சுழிக்குள் மட்டும்தான் போலும்.





**முபீதா அமீன்**
**அக்கரைப்பற்று**

# பீர்க்கு





**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**
**விவசாய போதனாசிரியர் (ஏறாவூர்)**
**சம்மாந்துறை, இலங்கை.**

Luffa acutangula எனப்படும் குக்கர்பிற்றேசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு உள்ளூர் மரக்கறி பயிராகும். இது பள்ளநாட்டு உலர், இடை, ஈர , இடை வலயங்களிலும் பொருராதார பயிராக செய்கை பண்ணப்படுகிறது.

## தேவையான காலநிலை

- வெப்பமான காலநிலையை விரும்பும் ஒரு பயிராகும்.
- கடல் மட்டத்தில் இருந்து 500அ உயரம் வரையான பிரதேசத்தில் திருப்திகரமாக செய்கை பண்ணலாம்.
- கடும் மழையுடன் கூடிய காலநிலை இப்பயிர்ச் செய்கைக்கு உகர்ந்ததல்ல.
- நீர் நன்கு வடிந்து செல்லக் கூடிய சேதன பொருட்களை கொண்ட மணல், இருவாட்டி மண் இப்பயிருக்கு மிக உகர்ததாகும்.
- மண்ணீர் பெறுமானம் 5.5 - 7.5 வரை காணப்படுவது உகர்ததாகும்.

## பயிர்ச் செய்கை காலம்

- ஈர வலயத்தில் வருடம் முழுவதிலும் உலர் வலயத்தில் கால போகத்திலும் பிரதானமாக இதனை செய்கைபண்ணலாம்.
- சிறு போகத்தில் நீர்ப்பாசனத்துடன் உலர் வலயத்தில் இப்பயிரை திருப்திகரமாக செய்கைபண்ணலாம்.

## நிலத்தை பண்படுத்தல்:

- நிலத்தை புரட்டி , மண் கட்டிகளை உடைக்கவும்.
- இதன் பின் 30% 30% 30% உஅ அகலம்ழு ஆழம்ழுநீளம் அளவுள்ள குழிகளை சரியான இடைவெளிக-ளில் தயாரித்துக் கொள்ளவும்.
- தோட்டத்தில் நீர் அநாவசியமாக தேங்கி நிற்பதை தவிர்த்துக் கொள்வதற்காக சில ஆழமான காண்களை அமைத்தல் வேண்டும்.

## சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்

- LA - 33 :

பழுப்பு, கடும் பச்சை நிறமான நீண்ட காய்கள் உருவாகும் வர்க்கமாகும்.

- **ஆசிரி :**



இது புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட பீர்க்கு வர்க்கமாகும்.

30 உ.அ நீளமான காய்கள் உருவாகும்.

தற்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ள LA - 33 வர்க்கத்தை விட அதிகளவில் நுகர்வோர் விரும்பும் வர்க்கமாகும்.
ஹெக்டேர் ஒன்றில் இருந்து 8 மெற்றிக் தொன்னை விட அதிகளவான சராசரி விளைச்சலை பெறலாம்.

- **நாஹா :**



- மெல்லிய பச்சை நிறமானது.
- இது 01 M அளவுக்கு நீண்டு வளரும் இனமாகும்.
- சதைப்பற்றான அதிக விளைச்சலை தரும் இனமாகும்.

- **நதி :**



- இது மெல்லிய பச்சை நிறமான காயாகும்.
- வைரசு நோய்க்கு எதிர்ப்புத் தன்மையானது.
- 10 மெ.தொன் வரை விளைச்சல் இனை பெறலாம்.
- தேவையான விதை : ஹெக்டேருக்கு 03 கிலோ கிராம்.
- இடைவெளி : 1.5 % 1.5 மீற்றர்

**விதைகளை நடல்:**

தயார் செய்யப்பட்ட குழிகளில் நன்கு உக்கிய சேதன பசளையில் ஒரு கூடை அளவு இட்டு மேல் மண்ணுடன் கலந்து விடவும்.

விதைகளை நடுவதற்கு 2 - 3 நாட்களுக்கு முன்னர் சிபாரிசு செய்யப்பட்ட அளவில் அடிக்கட்டு பசளையை மண்ணில் இட்டு மண்ணுடன் கலந்து விடவும்.

ஒரு குழியில் 3 - 4 விதைகளை ஒன்றுக்கொன்று சிறிது தூரத்தில் உள்ளவாறு 2 - 3 உ.அ ஆழத்தில் நடவும்.

நடுகை செய்யப்பட்ட விதைகளுக்கு நன்கு நீர் ஊற்றவும்.

**நாற்றுகளை ஐதாக்கல் :**

விதைகளை நடுகை செய்து 02 வாரங்களாகியதும் ஒரு இடத்தில் 02 நாற்றுகள் மாத்திரம் இருக்கத்தக்கவாறு ஏனையவற்றை பிடுங்கிவிடவும்.

**கொடிகளை படரவிடல்:**

பீர்க்கிலிருந்து சிறந்த பலனை பெற்றுக் கொள்வதற்காக 2 மீற்றர் உயரமான பந்தல்களில் கொடிகளை படரவிடுதல் வேண்டும்.

எனவே இதற்கு 3 மீற்றர் இடைவெளியில் பலமான தூண்களை நட்டு அதன் மேல் கயிற்றால் அல்லது கம்பிகளால் வலைகள் போன்று அமைத்தல் வேண்டும்.

பந்தல் வரை கொடியில் உருவாகும் பக்கக் கணுக்களை அகற்றிவிடல் வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் பீர்க்கினை செய்கை பண்ணும் போது கம்பி வேலிகளில் அதனை படரவிடலாம்.

**பசளை இடல்**

விதைகளை நடுவதற்கு என ஆயத்தம் செய்யப்பட்ட மேடைகளுக்கு சேதன பசளைகளுடன் பின்வரும் அளவில் இரசாயனப் பசளை களை இடவும்.

**பசளை இடல்**

விதைகளை நடுவதற்கென ஆயத்தம் செய்யப்பட்ட மேடைகளுக்கு சேதன பசளைகளுடன் பின்வரும் அளவில் இரசாயனப் பசளைகளை இடவும்.

| | யூரியா | TSP | MOP |
|---|---|---|---|
| அடிக்கட்டு பசளை | 75 | 200 | 60 |
| விதை முளைத்து | | | |
| 4 வது வாரம் | | 75 | 60 |
| 8 வது வாரம் | | 75 | 60 |

## களைகள் கட்டுப்பாடு

பீர்க்கின் வேர்த் தொகுதி ஆழமற்ற தாகும். எனவே களைகளை கட்டுப்படுத்தும் போது வேர்களுக்கு சேதம் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- நோய் - பீடை கட்டுப்பாடு :

- பழ ஈ



பழ ஈயின் புழுக்களால் பீர்க்கின் உள்ளே சேதம் விளைவிப்பதால் காய்கள் அழுகும்.

இத்தாக்கத்தை கட்டுப்படுத்த பூச்சி நாசினிகளை விசிற வேண்டிய அவசியமில்லை.

15 உஅ அகலமான 40 உஅ நீளமான இருபக்கமும் திறந்த நிலையில் உள்ள பொலித்தீனால் காய்களுக்கு உறையிடவும்.

இப்பொலித்தீனை காம்பில் கட்டி விடவும் .

- அவுலக்கபோரா வண்டு :





▪ பங்கசு தாக்கம்:

- நீண்ட நாட்களுக்கு நீர் தேங்கி நிற்குமாயின் கொடியின் அடிப்பாகம் பங்கசுக்களினால் பாதிக்கப்படலாம்.

- சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினி ஒன்றை கொடியின் அடிப்பாகத்திற்கு விசிறல்.

- மண்ணின் நீர் வடிந்து செல்லும் தன்மையை அதிகரித்தல்.

என்பனவற்றின் மூலம் இதனை தவிர்த்துக் கொள்ள முடியும்.



## அறுவடை

- முதிர்ச்சியடைய முன் காய்களை அறுவடை செய்யவும்.

- பயிரின் வயது 60 - 70 நாட்களாகும் போது முதலாவது அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- இதன் பின் 4 நாட்களுக்கு ஒரு தடவை 1 1.`.2 - 2 மாதங்கள் வரை 10 - 15 தடவைகள் அறுவடை செய்யலாம்.

▪ அறுவடைக்கு பின் :

- அறுவடை செய்த காய்களின் மீது கடும் சூரிய வெளிச்சம் விழுவதைத் தவிர்க்கவும்.

காய்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறந்த காற்றோட்டம் இருக்கத்தக்கவாறு கூடைகளில் அடுக்கிக் கொண்டு செல்லலாம்.



### பிரச்சனைகளை தீர்க்கும் கற்றாழை!

பெரும்பாலான ஆண்களுக்கு ஆண்மைக் குறைபாடு ஏற்படுகிறது. அதை சரி செய்ய சோற்றுக் கற்றாழையின் வேர்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பாலில் வேக வைக்க வேண்டும். பிறகு அதை நன்றாக காய வைத்துப் பொடியாக்கி ஒரு டீஸ்பூன் அளவு பாலில் கலந்து தினமும் சாப்பிட்டால் ஆண்மை பிரச்னை தீர்ந்து தாம்பத்யம் வலுப்பெறும்.

*Through the door of poverty*
*The cart moved*
*We stayed inside*
*Safe and cool*

*Not bothering about the load*
*The cart kept moving*

*The cart passed through*
*Not only tarred roads*
*And concrete roads*
*Even through the woodsa*
*Along water courses*
*Across the  deserts and dunes*

*Navigating filthy streets*
*Hitting spiderwebs*
*Through tunnels and caves*

*Over bumpy paths*
*With creeping roots*
*Across the swamps*
*Sliding  into mud*
*The wheels*
*Continued to turn...*

*No time for tears*
*No time to sleep*
*With total exhaustion*
*The cart kept moving*

*Although*
*Ignorant and  unaware*
*Why the cart*
*Dashed off*

*And Jerked forward...*
*The journey felt*
*Unique and meaningful*

*The warmth of the engine*
*Made us grow*
*Upholding complete integrity*

*The carriage*
*Which has crossed*
*So many paths*
*Is now at rest*
*In the city of Majma*
*Inside a muddy cabin*
*Number  861*

*The cart*
*That driven us ashore*
*Has lost itself...*

*Oh God*
*Open a new path*
*Towards the heaven*
*For it to travel*
*Let it travel*
*Like lightning*
*In the hereafter*

*Bless me.. oh God*
*To be a daughter*
*In the same carriage*
*In the heaven ...!*

# The journey...!

# மஜ்மா நகர் மண்வீட்டிலக்கம் 861

வறுமையின் வாசலைக் கீறிக் கொண்டு
நகர்ந்தது அந்த வண்டி
நாங்கள் கண்ணாடிப் பதுமைகளாக
செப்பமாய் அதனுள்ளே
பாதுகாப்பாயும்
சுற்றிலும் இன்பமாயும் சுகமாயும்.

சுமைகளென எண்ணாத அந்தவண்டி
நகர்ந்து கொண்டே இருந்தது
கடந்த பாதைகளெல்லாம்
தார் வீதிகளாயும் ,கொங்கிரிட்டு வீதிகளாவும்
மட்டுமே இருக்கவில்லை,
வீதிகளே இல்லாத
காடுகளிலும்,
நீர் பாய்ச்சல்களிலும்
பெருத்த மணல் பரப்புகளிலும்..

தூசுகளும் குப்பைகளும் நிறைந்த தெருக்களிலும்
சிலந்தி வலைபின்னி விட்டிருந்த
இறுக்கமான வழிகளிலும்
சுரங்கப்பாதைகளிலும்,

குகை வழிப் பாதைகளிலுமாய் சென்றிருந்தது
வேர்கள் மேலெழுந்த
முரட்டு பாதைகளிலும்
சில்லுகள் புதைந்த சதுப்பு
நிலங்களையும் தாண்டி வந்தது
கருணையை வேண்டி
கண்ணீரை விரிக்கவும் நேரமில்லை
களப்பிலும் ,களைப்பிலும்
கண்ணயராமல் சென்று
கொண்டிருந்தது.

உரத்து ஓடும் போதல்லாம்
கருத்து புலப்பட வில்லை
ஆனாலும்
மரத்துப் போன யந்திரமல்ல
ஈரம் உள்ளே ஆறாய் ஓடியது
அது எங்களை முளைக்கச் செய்தது
வளமான மண்ணும் அளவான நீரும்
தந்து இன்னும் செழிப்பாக்கியதாய்
ஒழுக்கமும் ஓதலும் நிறைவாய்த்தந்தது.

இத்தனை பாதைகள்
தாண்டி வந்த வண்டி இப்போது ஓய்வெடுத்துக் கொண்டது
மஜ்மா நகருக்குள்
இலக்கம் "861" எனும்
மண்வீட்டில்.

எங்களைச் கரை சேர்க்க
சுயம் இழந்த வண்டி அது
அதன் பாதைகளை இனி சுவனத்தை நோக்கி
ஆரம்பித்து வை இறைவா.

மஹ்ஸர் பாதையில் மின்னலாய் கடக்கட்டும்
சுவனத்திலும்
அதே வண்டியில்
நான் மகளாய் துயில் கொள்ள வரம் கொடு இறைவா.



Translated by : mareena ilyas shafi
Tamil poem by : Farzana MP

# Children's Day...!



Today is children's day
How's your day
My child...?

Your thoughts
pierce my heart
like a nail
My dear child

Here I am
In Arabia as a maid
Feeling afraid
As I do babysitting
Reflecting
Poor Rizana's fate
Triggers an alert

When NGOs arrived
With the support for deprived
Children of your age
I heard
You weren't considered

I sent some money
To you honey
Through the lady
Next door yet
It was recovered
As old debts...

When your drunk dad
Hungover on bed
Till noon like a newlywed
How devastated
You'd feel there
None is there to care...!

Mom is in great haste
To cuddle you and embrace
I'm regretting the past
For the time I wasted

Be diligent
My dear son
Though Children's Day
Isn't for you today
Let your offsprings
Celebrate it tomorrow
Without any sorrow
But with dignity
And nobility



# சிறுவர் தினம்...!

இன்று சிறுவர் தினமாமே
என் குழந்தை உனக்கு மட்டும் என்னவென்பேன்
உன் நினைவு ஆணிபோல்
ஆழ்மனதைத் துளைக்கிறது
நானோ அராபியக் குழந்தைக்கு
அமுதூட்டி நிற்கின்றேன்
அவதானம் தேவையென
அடிமனது பதைக்கிறது
றிசானாவுக்கு நடந்தகதை
நின்தாய்க்கு வேண்டாமே

அரசசார்பற்ற நிறுவனம்
ஆதரவற்ற சிறுவர்க்கு வழங்கிய
பொட்டலமும் உனக்குக் கிட்ட வில்லையாமே
அடுத்த வீட்டு அம்மாளிடம் உனக்கனுப்பிய
பணத்தை பழைய கடன்கள் பாக்கியென்று
பத்திரமாய்
சுருட்டிக் கொண்டாளாமே

பகல் பன்னிரண்டு  மணியாகியும்
உன் தந்தை போதை தெளியாமல்
புது மாப்பிள்ளைபோல் தூங்குகையில்
உன் நிலை என்னவென்பேன்

அம்மா அவசரமா  யுனை
அணைக்க வந்திடுவேன்
அன்று பூவரசமர நிழலில்  வீணே
பொழுதைக் கழித்ததனால்
இன்று புலம்பியழுகின்றேன்

கஸ்டப்பட்டு படி மகனே
உனக்கு இன்று கிடைக்காத
சிறுவர் தினத்தை
நாளை உன் பிள்ளையாவது
உரிமையுடன் கொண்டாடட்டும்



Translated by : Mareena Ilyas Shafee
Tamil poem by : Ajeera Kaleeldeen



சக்கரங்களை காலில் பொருத்திக் கொண்டு வேலைப்பளுவின் மத்தியில் தன்னையே மறந்து இயந்திரங்களாய் சஞ்சரிக்கும் மனிதனுக்கு துணையாக எத்தனையோ தொழில்நுட்பங்கள் வளர்ச்சி கண்டு கொண்டுதான் இருக்கின்றது. அந்த வகையில் கடந்த சில தசாப்தங்களாக பல்வேறு கிளைகளை பரப்பி, பல்வேறு துறைகளிலும் தனது வளர்ச்சியை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். நவீனத்தின் மாற்றம், தேவையின் நிமித்தம் மனிதனின் வேலை பளுவும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதனால் இயந்திரம் போலே வேலை செய்யும் மனிதனுக்கு ஒரு இயந்திர நண்பன் கிடைத்தால் எவ்வளவு இலகுவாக இருக்கும்! இதனை சிந்தித்த மனிதன் தனக்குத் துணையாக ஒரு இயந்திர நண்பனை வடிவமைத்துக் கொண்டான். ஆம் அதுதான் செயற்கை நுண்ணறிவு. காலப்போக்கில் இவன் மனிதனுக்கு

நண்பனா? சத்துருவா? இதுவே கேள்விக்குறி.

மற்றும் அதன் எதிர்கால போக்குகள் பற்றி விரிவாக நோக்கலாம்.

செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சி 1950 களிலேயே ஆரம்பமானது. "Father of AI" என அழைக்கப்படும் ஆலன் டூரிங் (Alan Turing) செயற்கை நுண்ணறிவு பற்றிய பல்வேறு கருத்துக்களை 'Computing Machinery and intelligence" என்ற கட்டுரையின் மூலம் குறிப்பிட்டுள்ளார். ஜான் மெக்கார்த்தி (John McCarthy) 1956-ல் டார்ன்மவுத் மாநாட்டில் Artificial intelligence என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார். பின்னர் 1980 களில் இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் 2000 களில் ஆழமான கற்றல் (Deep Learning) போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உருவாகின.

செயற்கை நுண்ணறிவானது கணினிகள் தரவுகளை பயன்படுத்தி மனிதர்கள் போல் முடிவுகள் எடுக்கும்

# செயற்கை நுண்ணறிவு மனிதனின் எதிர்காலத்தை மாற்றும் சக்தி





**றபீதீன் றபீஉல் பஸ்ரானா**, BA in ICT (Hons)
**நேகம**

இயற்கையாகவே மனிதனுக்கு உரித்தான மனிதனின் சிந்தனை, அறிவு, முடிவெடுக்கும் திறன் போன்றவற்றை கணினி மற்றும் மென்பொருட்களின் மூலம் உருவாக்கும் முன்னேறிய தொழில்நுட்பமே செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence-AI) ஆகும்.

இந்த அதிசய தொழில்நுட்பத்தின் பயன்பாடு மருத்துவம், வணிகம், கல்வி, பாதுகாப்பு மற்றும் தானியங்கி முறைகள் போன்ற பல்வேறு துறைகளில் அதிகரித்து வருகின்றது. இந்த கட்டுரையின் மூலம் செயற்கை நுண்ணறிவின் முக்கிய அம்சங்கள், அதன் பயன்பாடுகள், அதன் சமீபத்திய வளர்ச்சிகள்

தொழில்நுட்பமாக காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் அதன் முக்கிய அம்சங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- இயந்திரக் கற்றல் (Machine Learning - ML)
- ஆழமான கற்றல் (Deep Learning)
- இயற்கை மொழி புரிதல் (Natural Language Processing - NLP)
- தானியங்கி முடிவெடுப்பு (Automated Decision Making)
- தானியங்கி கட்டுப்பாடு (Autonomous Systems)

இயந்திரக் கற்றல் **(Machine Learning - ML)** மூலம் கணினி தரவுகளைப் பயன்படுத்தி, முன்கூட்டியே நிரல் எழுதாமல் கற்றுக்கொள்கிறது. இதன் மூன்று முக்கிய வகைகள் உள்ளன: மேற்பார்வை கற்றல் (Supervised Learning) முன்கூட்டியே கொடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் (எ.கா:தேவை யற்ற மின்னஞ்சல் [spam email] வடிகட்டி). மேற்பார்வை அற்ற கற்றல் (Unsupervised Learning) எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் தரவுகளில் ஒழுங்குகளை கண்டறியும் (எ.கா: சந்தை பகுப்பாய்வு). வழிகாட்டப்பட்ட கற்றல் (Reinforcement Learning) சோதனை முறையில் சிறந்த முடிவுகளைக் கண்டு பிடிக்க உதவுகிறது (எ.கா: தானியங்கி போக்குவரத்து அமைப்பு). ஆழமான கற்றல் **(Deep Learning)** செயற்கை நரம்பியல் வலைப்பின்னல்கள் (ANN) மூலம் தரவுகளை ஆழமாக புரிந்து கொள்ளும் (எ.கா: முகம் மற்றும் உரை கண்டறிதல், மருத்துவ கணிப்பு, தானியங்கி ரோபோட்டுகள்). இயற்கை மொழி புரிதல் (NLP) கணினி மனித மொழிகளை புரிந்து கொண்டு பதிலளிக்க உதவுகிறது (எ.கா: Google Assistant, Siri, மொழிபெயர்ப்பு, உரை உணர்வு பகுப்பாய்வு). தானியங்கி முடிவெடுப்பு **(Automated Decision Making)** மனிதர்களின் செயலே இல்லாமல் தரவுகளை வைத்து தானாக முடிவுகளை எடுக்கிறது (எ.கா: வங்கிகளில் கடன் ஒப்புதல், மருத்துவ பரி சோதனை, ஆன்லைன் பரிந்துரைகள்). தானியங்கி கட்டுப்பாடு **(Autonomous Systems)** என்பது இயந்திரங்கள், வாகனங்கள், மற்றும் சாதனங்கள் தானாக செயல்பட உதவும் (எ.கா: டெஸ்லா போன்ற தானியங்கி வாகனங்கள், தொழிற்சாலை ரோபோட்டுகள், ஸ்மார்ட் ஹோம் சாதனங்கள்).

செயற்கை நுண்ணறிவு இன்று மருத்துவம், வணிகம், போக்குவரத்து, மற்றும் தினசரி வாழ்க்கையில் பெரிய புரட்சியைக் கொண்டு வந்துள்ளது. இது மனிதர்களின் வேலை நேரத்தை மிச்சப்படுத்தி, வாழ்க்கையை மேலும் வசதியாக மாற்ற உதவுகிறது. அதன் அடிப்படையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள் அற்ற எந்தவொரு துறையும் இல்லை என்றே கூறலாம்.

மருத்துவத் துறையில் செயற்கை நுண்ணறிவு நவீன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, IBM Watson Health, துல்லியமாக மருத்துவ படங்களை ஆராய்ந்து, புற்றுநோய் போன்ற கடுமையான நோய்களை துரிதமாக கண்டறிகிறது. மேலும், DeepMind அமைப்பின் AI முறை மருத்துவர்களுக்கு, அவசர நோயாளிகளின் நிலையை முன்னறிவித்து, அவசர சிகிச்சை வழங்க உதவுகிறது. AI Chatbots, மின்முறையில் நோயாளிகளுக்கு மருத்துவ தகவல்களை வழங்குகின்றன, உதாரணமாக BenevolentAI நிறுவனம், COVID-19 மருந்து ஆராய்ச்சியில் வணிக துறையில் வாடிக்கையாளர் சேவையை மாற்றியுள்ளது. யுஅயணழஎ போன்ற நிறுவனங்கள், வாடிக்கையாளர்களின் பழக்கங்களை ஆராய்ந்து, சரியான விளம்பரங்களை கொடுக்கின்றன, இதனால் விற்பனை அதிகரிக்கின்றது. Chatbots மூலம், HDFC Bank போன்ற வங்கிகள் 24/7 வாடிக்கையாளர் சேவையை வழங்குகின்றன. மேலும், செயற்கை நுண்ணறிவு, பங்குச் சந்தை மாற்றங்களை கணித்து, முதலீட்டாளர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தல்களை வழங்குகிறது, இதனால் அவர்கள் சிறந்த முடிவுகளை எடுக்க முடிகிறது.

மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் தேவைகளை மதித்து, அவர்களுக்கு ஏற்ற பாடத்திட்டங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவு உதவுகிறது. Duolingo மற்றும் Carnegie Learning போன்ற செயலிகள், மாணவர்களுக்கு தனிப்பயன் கற்றல் அனுபவத்தை வழங்குகின்றன. இது, மாணவர்களுக்கு தங்கள் முன்னேற்றத்திற்கு ஏற்ப புதிய வகையான கற்றலை உருவாக்கும். இதன் மூலம், கல்வி முறைகள் மேலும் நவீனமாகவும் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றதாகவும் மாறுகின்றன.

செயற்கை நுண்ணறிவு, இணைய பாதுகாப்பு துறையில் முன்னணி பங்காற்றுகிறது. AI-பொருந்திய சைபர் பாதுகாப்பு முறைகள், சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளை முன்கூட்டியே கண்டறிந்து, பிஷிங் மற்றும் டேட்டா திருட்டை (phishing and data theft) தடுக்க உதவுகின்றன இது, நமது தகவல்கள் மற்றும் தனியுரிமையை பாதுகாக்க உதவுகிறது. உதாரணமாக, Darktrace போன்ற நிறுவனங்கள் AI பரிசோதனைகளை மேற்கொண்டு, சைபர் தாக்குதல்களை விரைவாக கண்டறிந்து தடுக்கும்.

தானியங்கி வாகனங்கள் செயற்கை நுண்ணறிவின் சிறந்த உதாரணமாக விளங்குகின்றன. Tesla போன்ற வாகனங்கள், சுய இயக்கத்தை கொண்டு பயணத்தை மிகவும் பாதுகாப்பாக மற்றும் நேரத்தை மிச்சப்படுத்தும் விதமாக மாற்றுகின்றன. இந்த வாகனங்கள், சாலை நிலை, தடைகள் மற்றும் மற்ற வாகனங்களை கணிக்கின்றன, இதனால் பயணம் பாதுகாப்பாகவும் வேகமாகவும் நடைபெறுகிறது.

இந்த வகை பயன்பாடுகள், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு எளிமை, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டை தருகிறது என்பதைக் காட்டுகின்றன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், நம் ஒவ்வொரு நாளையும் மேலும் நவீனமாகவும், சிறப்பாகவும் மாற்றி அமைக்க உதவுகிறது. இவ்வாறு பல்வேறுபட்ட பயன்களை அள்ளி வழங்கும் செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய வளர்ச்சி நிலை பற்றியும் நாம் அறிந்திருத்தல் அவசியமாகும். அந்த வகையில் செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய வளர்ச்சி மிகவும் துரிதமாகவே காணப்படுகின்றது.

இன்று பல்வேறு துறைகளிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ள செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய வளர்ச்சிகளையும் அவற்றின் செயல் திறங்களையும் நோக்கும் போது செயற்கை மனிதர்கள், உணர்வு பகுப்பாய்வு, மற்றும் பசுமை தொழில்நுட்பம் போன்ற முக்கிய அம்சங்களை முன் வைத்து மனித வாழ்க்கையை எளிதாக்குகிறது.

***1. வேலைவாய்ப்பு***

AI தொழில்நுட்பம் வேலைவாய்ப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தானியங்கி தொழில்கள் மனிதர்களால் செய்யப்படும் பணிகளைச் சுருக்கி, புதிய தொழில்களையும் உருவாக்கியுள்ளது. Data Scientist, AI Engineer, மற்றும் AI Ethics Specialist போன்ற புது வேலைகள் துறைகளில் வளர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, ஒரு AI Engineer கம்பெனியில் மனிதர்களுக்கு மிகுந்த உழைப்பை தவிர்க்கும் முறைகளைக் கண்டுபிடித்து, தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது.

***2. உணர்வு பகுப்பாய்வு (Sentiment Analysis):***

சமூக ஊடகங்களில் பயனர்களின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்து, வணிக நிறுவனங்கள் தங்களின் சேவைகளை மேம்படுத்த முடிகின்றன. உதாரணமாக, வாடிக்கையாளர்களின் கருத்துக்களை ஆய்வு செய்து, விளம்பரங்களை பரிமாறலாம்.

***3. பசுமை தொழில்நுட்பம் (Green AI):***

AI சுற்றுச்சூழலை பாதுகாக்கும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. Green AI எனும் தொழில்நுட்பம், குறைந்த எரிசக்தி பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் தொழில்நுட்பத்தை செயல்படுத்த உதவுகிறது.

***4. செயற்கை மனிதர்கள்:***

AI-I பயன்படுத்தி மனிதர்களுக்கு நிகரான ரோபோட்டுகள் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக, மருத்துவத் துறையில் ரோபோட்டுகள் நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து, மருத்துவ ஆலோசனைகள் வழங்குகின்றன.

***5. சமூக நெறிமுறைகள் (AI Ethics):***

AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன், தனியுரிமை, தரவு பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்த பிரச்சனைகள் எழும்புகிறன. இதனால், புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் உருவாக்கப்படுகின்றன.

இந்த வளர்ச்சிகள், செயற்கை நுண்ணறிவு உலகின் முக்கியமான மாற்றங்களை மற்றும் மனித வாழ்க்கையை எளிதாக்கும் முறைகளை விளக்குகின்றன.

எதிர்கால செயற்கை நுண்ணறிவு மனிதர்களுடன் இணைந்து செயல்படும் புதிய அத்தியாயங்களைத் திறக்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். தொழில்நுட்பத்தின் அவ்வப்போது நடக்கும் முன்னேற்றங்களின் ஒளியில், செயற்கை நுண்ணறிவு நமது தினசரி நடவடிக்கைகள், வேலை நிர்வாகம் மற்றும் சேவைகளில் ஒரு மாறுதலான ஆதரவாக விளங்குகிறது. எதிர் காலத்தில், இது பெரும் மாற்றங்களை உண்டாக்கி, சமூக வாழ்வின் ஒவ்வொரு துறையையும் புதுமையாக மாற்றும் என நம்பப்படுகிறது.

இன்றைய ஆய்வுகளும், புதிய ஆல்காரிதம்களும், தரவின் திறமையான பயன்பாட்டாலும், செயற்கை நுண்ணறிவின் திறன் முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றன. இயந்திரக் கற்றல், ஆழமான கற்றல், தானாக இயக்கும் சிஸ்டம்கள் போன்ற துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள், மருத்துவம், கல்வி, வணிகம், சுற்றுச்சூழல் பராமரிப்பு போன்ற துறைகளில் தீர்மானமான மாற்றங்களை ஏற்படுத்தும்.

மேலும், எதிர்காலத்தில் உருவாகும் செயற்கை நுண்ணறிவு மாடல்கள் மனிதன் மற்றும் இயந்திரத்துக் கிடையிலான ஒத்துழைப்பை புதிய பரிமாணங்களோடு மேம்படுத்தி, பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளை ஒருங்கிணைத்துக் கொண்டு உருவாகும். பல ஆய்வுகள், செயற்கை நுண்ணறிவின் செயல்திறனை மேம்படுத்துவதோடு, மனித வாழ்க்கையை மேலும் சிறப்பாக மாற்றும் வழிகளை வெளிப்படுத்துகின்றன.

இதனால், புதிய ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் இணைந்து, செயற்கை நுண்ணறிவு நமக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி, மனித வாழ்கையை புதிய அத்தியாயங்களுக்கு வழியெடுக்குமென எதிர்க்கலாம். இருந்தும் ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல, இங்கேயும் நாம் இரண்டாவது முகத்தை எதிர்கொள்ள வேண்டும், அது மிகவும் ஆபத்தானதாக இருக்கலாம்.

செயற்கை நுண்ணறிவு (AI) உலகின் பல துறைகளில் துரிதமாக பரவியுள்ளதுடன், அதன் எதிர்மறை விளைவுகளும் அதிகரித்துள்ளன. இவை வேலை இழப்பு, அறிவு குறைவு, தனியுரிமை பிரச்சினைகள், பொருளாதார inequality மற்றும் சமூக மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

AI மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பங்கள் பல தொழில்களில் மனிதர்களின் வேலையை மாற்றியுள்ளன. குறிப்பாக, தரவு தொகுப்பு மற்றும் உற்பத்தி துறைகளில் AI மற்றும் தானியக்க இயந்திரங்கள் வேலை வாய்ப்புகளை குறைக்கின்றன. இதன் மூலம், குறிப்பிட்ட தொழில்களில் தொழிலாளர்கள் தங்களது பணிகளை இழக்கின்றனர், இது வேலை சந்தையில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

தகவல்களை எளிதாக பெற AI வழியாக மக்கள் கற்றலுக்கு தேவையான ஊக்கத்தை இழக்கின்றனர். உதாரணமாக, Google Assistant மற்றும் Siri போன்ற ஆன் லைன் உதவிகளின் மூலம், மனிதர்கள் ஆராய்ச்சி மற்றும் புதுமையான கற்றல்களில் ஈடுபடாமல் தகவல்களை எளிதில் பெறுகிறார்கள். இதன் காரணமாக, அறிவின் வளர்ச்சி குறைகின்றது.

இதன் விளைவாக, நம் சமூகத்தில், ஆழமான சிந்தனை மற்றும் படைப்பாற்றல் குறைந்து, தனிப்பட்ட சிந்தனை முறைகள் மெதுவாக மங்கிக்கிடக்கும். தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையை எளிதாக்கும் போது, அதனை நமது அறிவு மேம்பாட்டிற்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும். அதை விடுத்து சுய சிந்தனைக்கு வேலை வைக்காது யாவற்றிற்கும் செயற்கை நுண்ணறிவை நாடுவதால் எதிர்காலத்தில் மனிதர்கள் தங்களது மூளையின் முழு திறனையும் இழக்க நேரிடும் அபாயம் இருக்கிறது.

அதிக தகவல் சேகரிப்பு மற்றும் கண்காணிப்பு ஆகியவை தனியுரிமை பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன. AI மூலம் சமூக ஊடகங்களில் தனிப்பட்ட தகவல்கள் திடம்செய்தி சேகரிக்கப்படுகின்றன, இது பாதுகாப்பு மற்றும் சட்டப்பூர்வ சிக்கல்களை உருவாக்குகிறது.

செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி பொருளாதார inequality ஐ அதிகரிக்கின்றது. பெரிய நிறுவனங்கள் தானியங்கிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பல வேலை வாய்ப்புகளை நீக்குகின்றன, இதன் விளைவாக, சிறிய தொழில்கள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது.

முதன்மையாக, AI மூலம் உருவாக்கப்பட்ட தவறான தகவல்கள், குறிப்பாக Deepfake வீடியோக்கள், மக்கள் குழப்பத்தில் சிக்க வைக்கின்றன. இதனால் சமுதாயத்தில் விழிப்புணர்வு குறைந்து, உண்மையான தகவல்கள் மிகுந்த சவாலுக்கு உள்ளாகின்றன.

இவ்வாறு, AI மற்றும் அதன் பயன்பாடுகள் பலவகையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன, இவை யாவும் தான் இன்று அழகிய தொழிநுட்பத்தை எமக்கு எதிராக மாற்றிக் கொண்டிருக்கின்றன. இதில் இருந்து விடுபட நாம் தொழிநுட்பம் பற்றிய முழுமையான தெளிவை பெற்று நன்மைகளின் பக்கத்துடன் அதன் பயன்பாட்டை முடக்கி விடுதலே சிறந்த வழி எனலாம். கூடுதலாக, பிற வழிகளில் எழும் பிரச்சினைகளுக்கு சட்டப்பூர்வ தீர்வுகள் வகுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்திருப்பது முக்கியம்.

இன்றைய சூழலில், வாழ்க்கை செயற்கை நுண்ணறிவின் எதிர்மறை விளைவுகளை சமாளிப்பதற்காக, நம் சொந்த சிந்தனையை, படைப்பாற்றலை, மற்றும் திறமைகளை வளர்த்துக் கொள்வது அவசியம் தொழில்நுட்பத்தை முழுமையாக நம்பாமல், அதன் உதவியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, நம் அறிவு மற்றும் திறமைகளை முன்னேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

**முடிவுரை**

செயற்கை நுண்ணறிவு (AI) இன்று பல துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, மனித வாழ்க்கையை எளிமையாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால், இதன் எதிர்மறை விளைவுகளும் கவனத்துடன் அணுகப்பட வேண்டும். வேலை இழப்பு, தனியுரிமை பிரச்சினைகள் மற்றும் சமூக சமத்துவம் குறைவு போன்ற சவால்கள் மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ளன.

எதிர்காலத்தில், செயற்கை நுண்ணறிவு மற்றும் மனிதர்கள் இணைந்து புதிய முறையில் செயல்பட வேண்டும். செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி, மனிதர்களின் அறிவாற்றல் மற்றும் உணர்வுகளை பாதிக்காமல், அவர்களுடன் ஒத்துழைந்து சமுதாயத்தில் பயனுள்ள மாற்றங்களை கொண்டு வர வேண்டும். செயற்கை நுண்ணறிவின் முழுமையான பலன்களைப் பெற நாம் அதை உத்தமமான முறையில் பயன்படுத்த வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்கள் யாவும் நாம் அதை அணுகும் விதத்திலேயே தாக்கி உள்ளது.

இதன் மூலம், செயற்கை நுண்ணறிவு மற்றும் மனிதர்களின் இணக்கம் ஒரு புதிய தலைமுறை மாற்றத்தை உருவாக்கும், இதில் நம் உலகம் மேலும் மேம்படும். சற்று தவறினும் முழுதாய் சீர்குலையும் வாய்ப்புக்களும் ஏராளம்.





# கண்கள் திறந்தபோது

அஸ்மா டீன்
கம்பளை

"மதினி நானும் நானாவும் பிள்ளைகளோட வெளியில போயிட்டுவர்ரோம். நீங்க சமைச்சு சாப்பிடுங்க "

ராகிலா கூற ரிம்ஸா சோர்ந்து போனாள்.ஆனால் அவளால் எதுவுமே பேசமுடியாத நிலை.அவளின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் கட்டளையைப்போல வேலைகளை பணித்து விட்டு ராகிலா தனது பிள்ளை-களுடன் வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

இவர்களை ஏக்கத்துடன் பார்க்கும் தனது பிள்ளை-கள் இருவரையும் பார்க்க ரிம்ஸாவிற்கு உள்ளம் கவ லையால் அடைப்பது போல் இருந்தது.

சமையல் அறைக்கு போய் உள்ளதை தேடி எதையாவது சமைத்து வைக்க வேண்டியது தான். "ஒருவேளை குடும்பத்துடன் வெளியில் சாப்பிடு-வார்களோ என்னவோ தெரியாது.ஊஹூ...ம்" அத்-தனை அலட்டல் களையும் ஒரு பெருமூச்சில் தணி-த்து கொள்ள ரிம்ஸா முயன்றாள்.

யாரை நோவுவது எல்லாம் தன்னால் தானே வந்தது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரி போட்டுக்கொள்வது போல அவளாகவே அவளுக்கு செய்து கொண்ட அநியாயம். தனது வீடு முழுவதும் அலங்கோலமாக இருக்க எதுவுமே தலைக்கு எடுக் காமல் இந்த காலை வேளையிலேயே ராகிலா தனது கணவருடன் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பயணம் புறப்பட்டு விட்டாள்.

கையில் துடைப்பமும் தும்புத் தடியுமாக வீட்டின் வரவேற்பறை பக்கம் போன போது தான் கண்டாள் தனது சகோதரன் அதுதான் ராகிலாவின் கணவர் ஹம்தானின் பெயர் பொறித்த பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் அங்கே கிடந்ததன." விழியின் ஒளி, எதிர்க்கலத்தின் வழி.எங்கள் தலைவர் ஹம்தான் ஹாஜியார்", என கண்கள் வரையப்பட்டு கண் சின்ன-த்தில் போட்டியிட்ட ஹம்தானின் போஸ்டர்கள்.

"ஆஹ்! இதுக்குதானே பின்னா என்டு காட்டுமிராண்டி த்தனமாக நடந்துக்கொண்டேன்" தன் கண்களை மூடிக்கொண்டு அப்படியே கதிரையில் சாய்ந்து உட் கார்ந்துக் கொண்டாள் ரிம்ஸா.

ரிம்ஸாவின் கணவர் ஆஷிக்.பெயரில் மட்டுமல்ல. நிஜத்திலும் அன்பாளன்தான். வியாபாரம் செய்பவன். சுமாரான வருமானம் என்றாலும் மனைவி பிள்ளை-களுக்கு எதிலும் குறைவைக்க வில்லை. ரிம்ஸாவும் ஆஷிக்கிற்கு ஏற்ற மனைவி. அவர்கள் இருவரும் கருத்தொருமித்த தம்பதிகள்.நடந்து முடிந்த தேர்தலில் ரிம்ஸாவின் சகோதரன் ஹம்தான் கண் சின்னத்தில் போட்டியிட்ட ஆஷிக்கின் ஆத்ம நண்ப ரான முபாரிஸ் வெண்புறா சின்னத்தில் போட்டி யிட்டான்.

தனது சகோதரனுக்கு ஆதரவு வழங்கும் படி ரிம்ஸா ஆஷிக்கிடம் கேட்க அவனோ இந்த வி-டயத்தில் அவளது கருத்துக்கு ஒத்துப்போக முடியாது என இறுதியில் கூறிவிட்டான். அத்தோடு இருவரும் அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வது என்றும் இதற்காக தாம் ஒருவரை ஒருவர்

பகைத் துக்கொள்வதையில்லை எனவும் முடிவு செய்திருந்தனர்.

அன்பாலும் ஆதரவாலும் கட்டுண்ட அக்குடும்பத்தில் அன்றாட உரையாடல்களில் கட்சிகளைப்பற்றிய விடயங்களும் பேசப்பட்டன. சில கட்டங்களில் "இவர் அப்படி செய்வார்" என்றால் "இல்லை அவர் தான் இப்படி செய்வார்" என்ற அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பித்து ஆக்ரோஷம் தூள் பறக்க தம்பதியர் ஒற்றுமை ஆட்டம் காண தொடங்கியது. இது வாடிக்கையாகிப் போக, ஒரு நாள் இரவு ,கட்சி கூட்டம் ஒன்றிற்காக போய் ஆஷிக் வரதாமதமாகி விட்டான். அதே தினத்தில் ரிம்ஸாவும் ஜலதோஷத்தால் பீடிக்கப்பட்டு இருந்தாள்.

வழமையாக ரிம்ஸா சுகயீனம் அடைந்திருக்கும் போது உதவி செய்யும் ஆஷிக் அன்று வரத் தாமதமாகி விட்டான். உணவு ஏதும் செய்யாமலும் பசிக்களைப்பிலும் இருந்த ரிம்ஸாவிற்கு பொறுமை எல்லை மீறிப்போனது. அதையறியாத ஆஷிக் வந்ததும் வராததுமாக "ரிம்ஸா பசிக்கிறது என்ன சாப்பாடு" என்று கேட்டான். அங்கே அவனுக்கு சாப்பாடு கிடைக்கவில்லை. அதற்கு பதிலாக ரிம்ஸாவிடம் இருந்து எள்ளும் கொல்லும் வெடித்து சிதறியது. ஆஷிக்கும் காரசாரமாக கத்த இவளும் எதிர்வாதம் செய்ய பனிப்போர் பெரும் வெள்ளமாக மாறி அங்கே பிரலயமே நடந்து விட்டது. அடுத்த நாள்காலை ஆஷிக் ரிம் ஸாவுடன் சமாதானம் பேச நினைத்து அவளை நாடியப் போது அங்கே அவளிருக்கவில்லை. ஆனால் அவளெழுதி வைத்து விட்டுப் போன கடிதம் ஒன்றே அவனுக்கு பதிலளித்தது.

ஆம் கண் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் தன் சகோதரன் ஹம்தான் வீட்டிற்கு அவள் பிள்ளைகளுடன் போயிருந்தாள். ஆஷிக் திணறிப் போனான். வீடு வெறிச்சோடி போனது.

"ஆம் என்ன நடந்தது எங்களுக்கு " என் சிந்திக்க தொடங்கினான்.

"ஆம்.உலகெல்லாம் சமாதானத்திற்கு அடையாளம் சொல்லும் வெண்புறா, இவர்களின் வாழ்க்கையில் சண்டையை அல்லவா மூட்டிவிட்டது."

ஹம்தானின் வீட்டில் தேர்தல் முடிவுகள் வரும் வரை இருந்த தாயாரும் தனது மூத்த மகள் வீட்டிற்கு புறப்பட்டு போக,ரிம்ஸா தனது பிள்ளைகளுடன் தனிமை படுத்தப் பட்டாள்.

ஹம்தான் தேர்தலில் வெற்றிபெற்ற நாள் தொடக்கம் வீட்டில் விருந்து உபசாரங்களுக்கு குறைவிருக்க வில்லை. இங்கு ரிம்ஸாவின் உள்ளத்து உணர்வுகளை யாருக்கும் புரிந்து கொள்ள வேண்டிய தேவை யும் இருக்கவில்லை

அடுத்த நாள் மேலதிக வகுப்புக்கு செல்ல வேண்டிய தனது பிள்ளையின் வகுப்பு கட்டணம். தலையை பிய்த்துக் கொண்டு நின்றாள்.

இரவு பதினொரு மணிவரை காத்திருந்து தனது நானா ஹம்தான் வந்ததும் தயங்கி தயங்கி பணக்கட்டணம் பற்றி கூறினாள்.அவரோ காலையில் நினைவு படுத்தி விட சொன்னார்.மறுநாள் பஜ்ர் தொழுகையை முடித்து விட்டு எழுந்தபோது தான் அவளுக்குள் ராகிலா கூறுவது கேட்டது.

"இங்கு பாருங்களே நீங்க ஏன் இதுகள்ட பாரத்த தலையில போட்டுக்கொள்றீங்க.அவவ நாங்களா கூப்பிட்டு எடுத்தோம்."

"இல்லை ராகிலா.தங்கச்சிய மச்சானோட சேர்த்து வைக்கனும் தான்."

"அது வேற .ஆனா எங்களுக்கும் செலவிருக்கே பார்த்து நடந்து கோங்க. முகம் கொடுத்தா மூக்க கடிச்சிருவா..."தொடர்ந்தும் ராகிலா கூற ,ரிம்ஸாவின் காது கடந்த செய்தி இதயத்தை இடித்தது. உடனடியாக தன் பெரிய மகனையும் அழைத்துக் கொண்டு தூங்கியிருந்த இளைய மகனை தூக்கி எடுத்தவள் கையில் தொலைபேசியை எடுக்க அதே நேரத்தில் மணியடித்தது.

இதயத்தின் எதிர்ப்பார்ப்பின் வியப்பு வாசலில்...

ஆம் அங்கே ஆஷிக்.இளங்காலை விடியலில் உறக்கத்திலிருந்து விழித்த கண்கள் இதயங்களின் அன் பிற்கான பாதையை கண்டுக்கொண்டிருந்தது.

"இதற்கு மேலும் இவ்வாறான விடயங்களிற்காக எமது அன்பை தொலைக்க மாட்டோம்." ஏககாலத்தில் ஆஷிக் ரிம்ஸா இருவரின் இதயத்தின் எண்ணங்களும் ஒன்றையே சொல்லிக் கொண்டிருந்தது.



# படித்ததில் பிடித்தது

ரிஷாதா றஷீத்
அக்குறனை

படித்ததில் மிகப்பிடித்ததொன்றை உங்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இது என்னில் போல் உங்களிலும் ஒரு மெல்லிய நல்லதிர்வை ஏற்படுத்தக்கூடும். உங்கள் இன்றைய நாளை கொஞ்சம் ஆசுவாசப்படுத்திவிடக்கூடும்.இதழ்களில் மென்நகை ஒன்றையும் ஆமாம். நிஜம்தான்ல? என்றும் முணுமுணுக்க வைக்கலாம்.

இதோ...!எல்லோரும் நல்லவர்கள்தான், ஆனால் வெவ்வேறு வழிகளில்! சிலருக்கு தினமும் தஹஜ்ஜுத் ஸலாத்துக்கு நள்ளிரவில் எழும் திறன் இருக்கும், ஆனால் சிலரால் அதிக முயற்சி செய்தாலும் எழுந்திருக்க முடியாது. இருப்பினும், அவர்கள் ஆண்டு முழுவதும் திங்கள் மற்றும் வியாழன்களில் நோன்பு இருப்பார்கள். மற்றவர்கள் மேலே சொன்ன இரண்டையும் அவர்களால் செய்ய முடியாது, ஆனால் அவர்கள் எங்கு சென்றாலும், யாசகர்களுக்கு தாராளமாக கொடுப்பார்கள். சிலருக்கு கூடுதல் இபாதாவைச் செயல்படுத்த பலம் இருக்காது, ஆனால் எப்போதும் சக மனிதர்களிடம் தூய இதயத்தையும் சிரித்த முகத்தையும் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் குழந்தைகளை சந்திக்கும்போதெல்லாம் அவர்களை மகிழ்ச்சியாக வைப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய மாட்டார்கள் இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும்? நீங்கள் செய்வதை செய்யாதவர்கள், உங்களை விட எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லது வழங்குவதற்கு அவர்களிடம் எதுவும் இல்லாதவர்கள் என்று நினைக்காதீர்கள். உங்கள் நன்மையான செயல்கள் மற்றவர்களை விட சிறந்தவை என்று ஒருபோதும் நினைக்காதீர்கள் உங்கள் இறையச்சம் உங்களுக்குள் நுட்பமான பெருமையை வளர்க்க அனுமதிக்காதீர். உங்கள் பெருமை உங்களை உங்கள் குடும்பம் மற்றும் உங்கள் நண்பர்களிடமிருந்து உங்களைத் தனிமைப்படுத்த ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். உங்கள் வம்சாவளி, செல்வம், புலமைத் திறன்கள், தோல் நிறம், போர்க்களத்தில் வலிமை ஆகியவை உங்களின் பக்திக்கு அளவுகோல் அல்ல. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா, சீனா மற்றும் உலகின் பிற நாடுகளில் உங்களை விட அல்லாஹ்விடம் நெருக்கமாக இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் உங்களை விட அதிக கஷ்டங்களை தாங்கி, சோதனைகளை சமாளிக்கும் நிலையில் இருக்கிறார்கள். உங்கள் தோற்றமும், அணியும் ஆடையும் உங்களின் பக்திக்கு அளவுகோல் அல்ல. சாதாரணமானவர்களாக இருந்தாலும், சாதாரணமானவர்களாக தோன்றினாலும், அல்லாஹ்வின் அருளின் அருகில் இருப்பவர்கள் உலகில் பலர் உள்ளனர்.

எந்த ஒரு ஜமாஅத் அல்லது எந்த ஒரு சமூக சேவை நிறுவனத்துடன் நீங்கள் இணைந்திருந்தாலும், அது உங்கள் அகங்காரத்தையும் பெருமையையும் வளர்க்கும் ஒரு கருவியாக இருக்க விடாதீர், மற்றவர்களை நீங்கள் தாழ்வாகப் பார்க்கக் கூடாது.

மேற்கூறிய எந்த நன்மையான விஷயத்திலும் தொடர்பில்லாவிட்டாலும், இதயம் தூய்மையாக இருக்கும் பலர் உள்ளனர். இஹ்லாசோடு, தூய எண்ணத்தோடு செய்யப்படாத நற்செயல்கள் சொர்க்கத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும் தானியங்கி பாஸ்போர்ட்கள் அல்ல. நாயின் தாகத்தைத் தணித்தன் மூலம் ஒருவர் சொர்க்கத்தை பெற்றார். மற்றொருவர் தினமும் படுக்கைக்குச் செல்வதற்கு முன் அனைவரையும் மன்னிப்ப-தன் மூலம் சொர்க்கத்தைப் பெற்றார். அவர்களிடம் வெளி உலகத்திற்கு காட்டுவதற்கு பெரிதாக எதுவும் இல்லை, ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது அல்லாஹ்வுக்கு முக்கியமானது நாம் வாழும் பூமியில் முக்கியமற்றவர் என்று பலரால் கருதப்பட்ட ஒருவர், சொர்க்கத்தின் வாயில்களை எளிதாக அடையலாம். அதி-கமான நற்செயல்களை செய்த சிலர், தங்கள் ஆணவம் மற்றும் பெருமையினால் அழிந்து போகலாம். நீங்கள் எதிர்பார்த்திராத ஒரு நபர், உங்களை சொர்க்கத்தின் நுழைவாயில் வழியாக அழைத்துச் சென்றால் அதற்காக நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். எப்போதும் பிறரிடம் உள்ள நல்லதையே பாருங்கள்.



# டிப்ஸ்... டிப்ஸ்...



**மீ**ந்துவிட்ட சப்பாத்திகளை மூடிபோடாமல் ஒரு தட்டில் வைத்து, ஃப்ரிட்ஜில் வைத்துவிடுங்கள். அடுத்த நாள் எடுக்கும்போது மொரமொரப்பாகி விடும். அவற்றை துண்டுகளாக நொறுக்கி வைத்துக் கொள்ளுங்கள். கடாயில் எண்ணெய் ஊற்றி தாளித்து, துண்டு சப்பாத்திகள் கொஞ்சம், கார்ன்ஃப்ளேக்ஸ், தேவையான உப்பு, காரம் சேர்த்து ஸ்நாக்ஸாக சாப்பிட... அருமையாக இருக்கும். விரும்பினால்... இதோடு வெங்காயமும் சேர்த்து வதக்கலாம்.

**கு**லாப்ஜாமுன் செய்த ஜீரா மீதமாகிவிட்டால்... ஃப்ரிட்ஜில் வைத்துவிடுங்கள். அவ்வப்போது, குழப்பிய தயிரில் கொஞ்சம் அந்த ஜீராவை கலக்கி, ருசியான லஸ்ஸியாகப் பருகலாம்.





**த**க்காளியை சாலட் செய்ய நறுக்கும்போது, உள்ளேயிருந்து சாறு வெளியே தெறித்து வழியும். இதைத் தவிர்க்க தக்காளியின் அடி பாகத்தில்... ப்ளஸ் குறி போல கீறிவிட்டு, பின்னர் வட்டமாக நறுக்கினால்... சாறு வீணாகாமல், எளிதாக நறுக்கிவிடலாம்.

**ச**மைத்த சாதம் மீந்துவிட்டதா? அதில் உப்பு போட்டு, ஒரு ஸ்பூன் தயிர், ஒரு டம்ளர் பால் ஊற்றிப் பிசைந்து 'ஹாட் பேக்'கில் எடுத்து வைத்துவிடுங்கள். அடுத்த நாள் ஃப்ரெஷ்ஷான தயிர் சாதம் ரெடியாக இருக்கும்.





**தோ**சை வார்க்கும் முன்பு, கல்லில் கொஞ்சம் பெருங்காயத்தைப் போட்டு, அதன் மீது எண்ணெய் ஊற்றி கல் முழுவதும் தேய்த்து விடுங்கள். பிறகு தோசை வார்த்துப் பாருங்கள்... சூப்பராக எடுக்க வருவதுடன், தோசையும் மணமணக்கும்!



# ஆட்டிசம்

ஜெனீரா ஜலீல்
காத்தான்குடி

ஆட்டிசம் குழந்தைகளை தாக்கும் மூளை வளர்ச்சிக் குறைபாடு கொண்ட நோய். இந்த நோயை முற்றிலும் குணப்படுத்த உலக அளவில் தொடர்ந்து இன்றளவும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக அளவில் 68க்கு ஒரு குழந்தை ஆட்டிசத்தின் பிடியில் உள்ளது. இந்தியாவில் 100 குழந்தைகளுக்கு ஒரு குழந்தை இந்த குறைபாட்டோடு பிறக்கிறது. பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் இந்த குறைபாட்டை போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில் 20 லட்சம் பேர் இந்த குறைபாடு உள்ளவர்களாக இருக்கின்றனர். மேலும் இந்த அளவானது ஆண்டுதோறும் அதிகரிக்கவே செய்கிறது. இலங்கையில் சுமார் 17% ஆனோர் ஆட்டிஸம் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

- **ஆட்டிசத்தின் அறிகுறிகள்**

ஆட்டிசம் குழந்தைகளின் சமூக தொடர்பும், மொழி ஆதிக்கமும் மிக குறைவாக இருக்கும். அவர்களின் கண் தொடர்பு மிக மிக குறைவாக இருக்கும் அதேபோல் சமூகத்துடனான தொடர்பு மிகவும் குறைவாக இருக்கும் எடுத்துக்காட்டாக தெரிந்தவர்களை பார்த்தவுடம் இயல்பாக சிரிப்பது போன்ற நடவடிக்கைகள் ஆட்டிசம் குழந் தைகளிடம் இருக்காது. பெயரை சொல்லி அழைத்தால் திரும்பி பார்க்க மாட்டார்கள். பொதுவாக தன் வயது ஒத்த குழந்தைகளுடன் கூட இணைந்திருக்க மாட்டார்கள். எப்போதும் தனியாக இருக்கவே விரும்புவார்கள். யாரைப் பார்த்தும் கைகாட்ட மாட்டார்கள், கைகளை அசைத்து அவர்களால் பேச முடியாது. குறிப்பாக ஆட் காட்டி விரலை காட்டி பேச மாட்டார்கள். இதேபோல் ஆட்டிசம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒன்றரை வயது ஆன பின்னர் கூட ஒரு வார்த்தை கூட பேச மாட்டார்கள். இந்த குறைபாடுகள் எல்லாம் இருந்தால் உடன-டியாக மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கெள்வது அவசியம்.

ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏதேனும் ஒரு வித சிறப்பு ஆற்றல் இருக்கும். அந்த ஆற்றலை பெற்றோர் கண்டறிந்து தூண்டி விட்டால் அவர்கள் அந்த துறையில் சிறந்து விளங்க வாய்ப்புள்ளது. ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சில பிரபலங்கள் இவர்களின் திறனை உரிய வகையில் பயன்படுத்தியதன் காரணமாக அரிய சாதனைகளால் உலக வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறார்கள்.

- **ஆட்டிசம் ஏற்படுவதற்கான காரணம்**

ஆட்டிசம் ஏற்பட காரணமாக குறிப்பிட்டு எதையும் சொல்ல முடி மரபு ரீதியான காரணங்கள் குறைவு தான். சராசரி வயதை தாண்டி குழந்தை பெற்றுக் கொள்வது, மதுப் பழக்கம், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம் போன்றவை காரணமாக சொல்லப்படுகிறது. ஆனால் இதுவரை உறுதி செய்யப்பட வில்லை இந்த நிலையில் தான் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் ஐ.நா.வின் அறிவுறுத்தலின் பேரில் உலகம் முழுவதிலும் ஆட்டிச விழிப்புணர்வு தினம் ஏப்ரல் 2ம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது.

- **மீட்கும் வழிகள்**

எப்போதும் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை எப்போதும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். உரிய மருத்துவ சிகிச்சையோடு தேவையான பயிற்சியும் கொடுக்கும் பட்சத்தில் அந்த குழந்தைகளும் இந்த உலகில் சாத்திக்க முடியும். அதற்கு ஆட்டிசம் பெற்ற குறைபாடு உடை பெற்றோருக்கு இந்த நாமும் இந்த சமூகமும் உறுதுணையுடன் இருப்பதை நாம் அனைவரும் உறுதி செய்வோம்.








# வாக்கு மீறப்பட்ட கனவு



ஏ.எல். சன்பரா
அக்கரைப்பற்று

உம்மா! நான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி விட்டேன்!...

சி.்.பாவின் குரலில் ஒரே உற்சாகம். கைநழுவிப் போன கனவை மீண்டும் பிடித்தவள் போல மகிழ்ச்சி. உயர்தரப்பரீட்சையை இரண்டாம் தடவையாக எழுதி தெரிவாகியிருந்தாள்.

ஆனால், உம்மா வஹீதாவின் முகத்தில் ஒரு மாற்றமுமில்லாமல் சமையல் அறையில் தேநீர் ஊற்றிக்கொண்டிருந்தாள். நல்ல விஷயம் தான்.. ஆனா நீ ஒன்றும் மற்ற பொண்ணுங்களோட வெளிய சுத்திக் கிட்டு படிக்க முடியாது. அத விட சந்தோசமான செய்தி ஒன்று இருக்கு. வாப்பா உன்னோட கல்யாண விசயம் பேசிட்டு இருக்காங்க. அடுத்த மாதம் அனேகமா முடியும்...

உம்மா அவள் தலையில் குண்டைத்தூக்கிப் போட்டாள். என்ன உம்மா சொல்றீங்க..?அந்த வார்த்தைகள் சி.்.பாவை இரும்புக்கம்பியால் அடித்து உட்கார வைத்தது போல் இருந்தது.

உம்மா “கல்யாணம் பண்ணுறதான். அதுக்கென்று இவ்வளவு அவசரமாவா? வீடு கூட கட்டலியே நாம? நானும் நம்ம குடும்பத்துக்கு நல்ல பேரை எடுத்து தருவேன் மா. ஆனா” இந்த ஒரு வாய்ப்பை மட்டும் எனக்கு தாங்களன்...

பைத்தியமா புள்ள உனக்கு ? நாம எங்கே ஊடு கட்ட இந்த நாளைல? மாப்பிள்ள சொந்த ஊடு கட்டியிருக்கார். உன்னை நம்ம சாதிக்கிட கல்யாணத்தில கண்டிருக்கார். சாதிக்கிட கூட்டாளியாம் ,அழகான பொடியன்.அதெல்லாம் பரவாயில்ல படிச்சுட்டு அப்பறம் கூட அவரை கல்யாணம் பண்ணிக்கலாம் தானே உம்மா? ......வஹீதா சிரித்தாள்.

உன் வாப்பா என்ன நினைக்கிறாரோ.அதுதான் இறுதி முடிவு.என்னாலயும் எதுவும் செய்ய ஏலா... பெண்களுக்கு வாழ்க்கை ஒழுங்கா அமைந்தால் அதுவே போதும். நீ கல்யாணம் முடிச்சதுக்கப்புறம், உன் கணவர் அனுமதி குடுத்தா படிக்கலாம்...என தேற்றினாள் உம்மா.

சி.்.பா ஒரு நிமிடம் தயங்கினாள்.

அவங்க அனுமதி குடுக்கறாங்கன்னு உறுதி இருக்கா? ஒருவேளை அவங்க சம்மதிக்கலன்னா...?

வாப்பா இதையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தவர், உறுதிதான் மகள். இவங்க நல்ல குடும்பம். அந்த பையன் நல்லவன். அவன் நீ படிக்கலாம் என்று சொல்லிட்டான். உனக்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறென்ன வேணும்? நம்ம குடும்ப நிலைமையில வீடு கட்டுறது என்கிறதே கனவுதான் மகள்...வலியவாற சீதேவிய காலால தள்ளப்படாது.....என புத்திமதி சொன்னார்.

சி.்.பாவின் கண்கள் கலங்கினாலும், உள்ளம் சிறு நம்பிக்கையோடு நிர்ப்பந்தத்தில் ஒத்துக்கொண்டது. திருமண வேலைகள் மும்முரமாக நடந்தன.காலம் தாமதிக்காது திருமணமும் வெகு விரைவாக முடிந்தது. முதல் சில நாட்களில் அக்ரம் மிருதுவாக நடந்து கொண்டான்.

அவனது சொந்த வீட்டில் மனைவியை அழைத்து சென்றுவிட்டான். நீ படிக்கலாம் சி.ஃபா. அதுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்றான். ஆனால், வாரங்கள் சென்ற பிறகு, அவனது போக்கு மாறியது.

சி.ஃபா, இன்று வீட்டில் நிறைய வேலை இருக்கே. நீயே சமையல்களை கவனிச்சுக்கோ....என்றான்

.....ஆஹ் சரிங்க.....

சமைப்பதால் ஒன்றும் அவளது படிப்பு கெட்டுவிடப் போவதில்லைதான்.. நம்ம வீட்டு வேலை தானே என்று அவள் சாதாரணமாகவே எடுத்துக் கொண் டாள். ஆனால் அடுத்து மாமியார் பேசிய பேச்சில் தான் பூதம் புறப்பட்டது.

ஆமா, நம்ம வீட்டுப் பொண்ணுங்களெல்லாம் வீட் லயே தான் நல்ல குடும்ப பெண்ணா இருக்கணும்,.... என்றாள் அக்ரமின் தாய் சுபைதா.

நாநாவுக்கும், வீட்டுக்கும் நல்லா நடப்பதுதானே நமக்கு முக்கியம். படிப்ப வெச்சிக் கொண்டு என்னத்த செய்ய, புள்ளைக்கி சொல்லிக்கொடுக்குற அளவுக்கு படிச்சா போதும் மதினி . ...என்றாள் சிமானா.

சி.ஃபா இப்போது மெல்லஉணர்ந்தாள்.அவர்களின் வார்த்தைகள், அவளது கனவுகளுக்கான மரணச் சாசனம் போல இருந்தன.அவசரப்பட்டு அவ்விடத்தில் சண்டை போட்டு ஆர்ப்பாட்டம் செய்வதில் அர்த்த மில்லை என்பதை அவள் உணர்ந்திருந்தாள் . எனவே கணவனை தனிமையில் சந்தித்து அவனிடம் நேராக கேட்டாள்.

......அக்ரம், நீங்க சொல்லியிருந்தது ஞாபகம் இருக்கா? நான் படிக்கலாம் என்று நீங்க சொன்னீங்க..

அவன் கண்கள் வேறொரு திசையைப் பார்த்தன....

சி.ஃபா, குடும்ப வாழ்க்கை முக்கியம். நீ அத புரிஞ்சிக்கணும். என் உம்மாவும் ராத்தாவும் சொல்றது தவறில்லயே... ஆனால், நீங்க?
நீ புரிஞ்சிக்கணும். இப்ப நீதான் இந்த வீட்டுக்குப் பொறுப்பு. உன்னால் ஒரே நேரத்தில் இரண்டையும் கவனிக்க முடியாது எதையாவது ஒன்றில் உன் கவனத்தை செலுத்து. எது முக்கியம் என்பதையும் நீயே தெரிவு செய். உனக்கு குடும்பமா கணவனா கல்வியா என்று வந்தால் எதனை தெரிவு செய்வாய்?...என்று கொஞ்சம் கடுமையாகவே பேசினான். இந்த விஷயத்தில நான் இனி பேசவே விரும்பவில்லை....புரிஞ்சுதா என கறாராக சொல்லிவிட்டு நகர்ந்தான்.

அவன் கூறிய அந்தச் சொற்கள் அவளுடைய எதிர் காலத்தை சிதைக்கின்றனவா என்ற பயம் ஏற்பட்டது அவளுக்கு.

சி.ஃபா நடுநிசியில் விழித்துக்கொண்டாள். தூக்கம் வரவில்லை. அவள் அக்ரமின் அருகில் அமர்ந்திருந்தாள். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

இது தான் எனது வாழ்க்கை. இனி எல்லாமே முடிந்தன....,என்று மனம் ஓலமிட்டது.

இல்லை. இன்னும் ஒரு வழி இருக்கும்,....என்று மனம் தீர்வைத் தேடியது. அவள் கணினியை திறந்து, இணையவழி கற்கைநெறிகளை ஆராய்ந்தாள். பல்வேறு நூல்கள் படிக்க தொடங்கினாள். தன் நண்பர்களிடம் பேசினாள்.

சி.ஃபா, உனக்கு உதவி செய்யலாம். ஆனா குடும்பத்தாருக்கு தெரியாம இருக்கணும்,.. என்றனர் சிலர்.

அவள் இரவுகளில் பாடங்களை படித்தாள். சமையல் நேரத்தில் கூட எதையாவது மனதில் படிப்பு சம்பந்தமாகவே அசை போட்டாள். வீட்டுப் பணிகளில் கவனம் செலுத்தும் போது கூட, மூளையில் கல்வியின் கனவுகள் ஓடிக்கொண்டே இருந்தன.அதுவே அவளுக்கான ஆற்றலாகவும் ஆனது. அக்ரம் அவளை கவனிக்கத் தொடங்கினான்.

சி.ஃபா, நீ இப்பவாச்சும் ஓய்வு எடுத்துக்கொள்ளலாமே இப்படி இரவெல்லாம் விழித்துக்கிட்டு?

நான் உங்களை மோசமாக உணர வைக்க விரும்பவில்லை அக்ரம். ஆனா எனக்கு படிப்பு முக்கியம். அது என் உயிர்.அதுதான் என் எதிர்காலம்.எனக்கே எனக்காக ஒரு அடையாளம் வேண்டும்....

என நா தளுதளுத்தாள்.

அவன் வார்த்தையற்றுப் போனான்.

நீ இவ்வளவு பிடிவாத குணமுடையவளா ? இப்போ என் சம்பாத்தியத்திற்கு என்ன குறை வந்தது...? என சினந்தான் அக்ரம்.

என்னை இப்படியே பேசி சமாளித்து விட முடியாது... ஒரு பெண்ணின் கனவுகளுக்கும் குடும்பத்துக்கும் இடையே சமநிலை இருக்கணும். ஆனா, அந்த சமநிலையை நிர்ணயிக்கிற உரிமை எனக்கும் இருக்கு...

அக்ரம் பதட்டத்துடன் பார்த்தான். இதுக்கு ஒரு முடிவு கட்டவே வேணும். என்று மனதில் எண்ணி கொண்டவன் தாயார் சுபைதாவுடன் கலந்தாலோசித்தான்.

உனக்குப் பைத்தியம் டா. நீ என்னத்துக்கு படிக்க ஓமென்று ஒத்துக்கிட்ட நீ ? இப்ப பாரு, இப்பவே திமிரு பிடிச்சு கதைக்காள். இனி படிச்சு வேலை கிடைச்சதெண்டா அவளை கையிலயும் பிடிக்க முடியாது .

புள்ள குட்டியோட ஒழுங்கா வாழுற வழிய பாரு.... சும்மா தேவையில்லாம ஊராக்கள்ற கதையவாங்கி கட்டிக்காம... உம்மா அவன் மனைதை சலவை செய்தாள். சி.ஃபாவிற்கு இவர்களையெல்லாம் மீறி பல்கலைக்கழகத்துக்கு நேரடியாக சென்று படிப்பதற்கு இயலவில்லை. ஆனால் எப்படியும் படித்தே தீர வேண்டும் என்ற வேட்கை தணியவில்லை. மிகுந்த சிரமத்தின் பேரில் இவர்களின் பேச்சுகளையெல்லாம் தாண்டி ,ஆன்லைனில் படித்து சி.ஃபா பல தேர்வுகளில்

சிறந்து விளங்கினாள். பல சான்றிதழ்களை பெற்றாள். அவளது முயற்சி பலிக்க, பல்கலைக்கழகப் பட்ட நெறியை வெளிவாரியாக தொடர்ந்தாள்.

இப்போது, அக்ரம் அவளிடம் வந்தான். ஒரு பிள்ளை அவளுக்கு பிறந்துவிட்டால் எல்லா பிரச்சினைக்கும் தீர்வு வந்துவிடும் என்று அவன் நம்பினான். அதனால் அவளது வழிக்கே சென்று மடக்க தீர்மானித்தான்.

சி.ஃபா, நீ வென்று விட்டாய். ஆனால் இவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டியதில்லையே...?என வினவினான்.

நான் அப்படி இல்லை, அக்ரம். ஆனா, நான் இனி என் வாழ்க்கையை நானே தீர்மானிக்கப் போறேன். என் வாழ்க்கையை அடுத்தவர்கள் இணைந்து வாழ முடியாது.அது என் வாழ்க்கையுமில்லை.என் வாழ்க்கையை நான் வாழ்ந்தால்தான் அது என் வாழ்க்கை. உங்களிடம் இருந்து எந்த உதவியும் எதிர்பார்க்க மாட்டேன்.

ஆனா..... சி.ஃபா என்ன சொல்றே நீ.... வாக்குறுதி மீறுபவன் பொய் சொல்பவன் நயவஞ்சகன். நீங்க அதைத்தான் பண்ணி இருக்கீங்க. ஒரு நயவஞ்சகனோட வாழ்வதற்கு எனக்கு விருப்பமில்லை .

அதைவிட வாழாவெட்டியாக இருந்து விடுவது நல்லது...உங்களுக்கும் உங்க வாழ்க்கைய வாழ தெரியாது.உங்கள சுற்றியிருக்கிறவங்கதான் உங்க வாழ்க்கைய வாழ்றாங்க...உங்களுக்கு என்று சுயபுத்தி கிடையாது.

அன்னிக்கி ஒரு நாள் சொன்னீங்களே.. வாழ்க்கையா கணவனா கல்வியா என என்னையே முடிவெடுக்க சொல்லி...கல்வி என்று முடிவெடுத்திருக்கன். அவள் விவாகரத்து கோரினாள்.அப்போதும் அக்ரமின் குடும்பம் அவளுக்கு எதிராகவே நின்றது.அக்ரம் இருதலைக் கொள்ளி எறும்பாகி ,அவனது கையாலாகாத் தனத்தால் தன் குடும்பத்தின் பக்கமே சாய்ந்தான். படிக்கவிருந்த பிள்ளையை கல்யாணம் கட்டி கொடுத்த குற்ற உணர்வில் சி.ஃபாவின் உம்மா வாப்பா துடிதுடித்துப் போயினர்...........அவள் படித்தாள்.படிப்பு படிப்பு என அதுவே மூச்சாகிப்போயிற்று அவளுக்கு. தனது ஊர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக பதவி ஏற்றாள்.அவள் பதவி ஏற்ற மறுநாளே அக்ரம் அவளை அலுவலகத்தில் தேடி வந்தான்.

நீ உண்மையில் வென்றுவிட்டாய், சி.ஃபா...நீ சொன்ன மாதிரி என் வாழ்க்கையை யாரோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.நான் மனசார விரும்பிய உன்னோடு வாழமுடியாத துரதிஷ்டசாலி நான்.நல் வாழ்த்துக்கள் சி.ஃபா.உன்னை மறக்க முடியாமல்தான் நானும் இன்னும் வாழாவெட்டியாக இருக்கிறேன். உன் கல்யாண அழைப்பிதழை எனக்கும் அனுப்பு. வந்து முழுமனசோட வாழ்த்த ஆயத்தமாயிருக்கன்....

அவள் பதிலை எதிர்பாராமல் வெளியேறியவனை கலங்கிய கண்களோடு பார்த்துக்கொண்டிருந்தாள் சி.ஃபா.




MASHOORA
சம்மாந்துறை
மஷூறா

SRI LANKA PEN CLUB

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின்

2025 க்கான வெளியீடாக

# இலங்கைப் பெண் கவிஞர்களின் கவிதைகள்

தொகுதியாக்கப்படவுள்ளது.

ஏற்கனவே

1. சுட்டுவிரல்
   ( 63 முஸ்லிம் பெண்களின் கவிதைத் தொகுதி )
2. இமயம் தழுவும் இறக்கைகள்
   ( முஸ்லிம் பெண்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுதி )
3. உலகம் முழுதும் எங்கள் கதைகள்
   ( முஸ்லிம் பெண்களின் சிறுகதைத் தொகுதி )

போன்ற தொகுப்புக்களை வெளியிட்ட Sri lanka Pen Club இவ்வருடம் தமிழில் எழுதும் இலங்கைப் பெண் கவிஞர்களின் கவிதைகள் தொகுத்து வெளியிடவுள்ளது.

இத்தொகுப்பு நூலில் தமது கவிதைகள் இடம்பெற வேண்டுமென விரும்பும் தமிழில் எழுதும் பெண்கள் தமது பெயர், முகவரி, தொடர்பிலக்கம், வாட்சப் இலக்கம் போன்ற விபரங்களுடன் 0770696559 என்ற வாட்சப் இலக்கத்திற்கு விண்ணப்பித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அவசியமானவர்களிடத்து பெண் என்பதற்கான அடையாளத்தை உறுதிப் படுத்தவும் கோரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

9 772961 519006

தலைவி

SLPC